KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# கலாநிலையம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ௵ ஜனவரி மீ 25௳ [No. 4

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 49
2. சூளாமணி—(நாட்டுப் படலம்) வித்வான் T.P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, M.A.B.L. 51
3. அப்பர் (64 கலை-இதிகாசம்-கந்தன் சரிதை) E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 52
4. ஷேக்ஸ்ப்பியர் நாடகக் காட்சித்திரட்டு (ஜான் அரசன்) T. S. நடராஜப்பிள்ளை B.A.B.L. 53
5. மதுரைக் கோவை. (பாங்கற் கூட்டம்) S. வையாபுரிப் பிள்ளை, B.A.B.L. 55
6. நம்மாழ்வார் வைபவம் (6-ம்பத்து, 3-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 56
7. தமிழ்ப் பாடம் வில்லிபாரதம்—கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 57
8. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை (வரதராஜ பாஹிமாம்) P. B. ஸ்ரீநிவாசாச்சாரியார், B. A. 59
9. கம்பராமாயணம்—(பம்பைப் படலம்) T. N. சேஷாசலம் B.A.B.L. 60
10. வர்த்தமானம் 64

## கலாநிலையம்

### உண்மையே உண்மை யம்மா.

பின்னே செல்வதன்றி முன்னேற முயல்வதே இக்கால உலகம் செய்கின்ற பிழைகளில் மிகப் பெரியது. இதுவே மற்ற எல்லாப் பிழைகளுக்கும் காரணமாகின்றதென்னலாம். "முன்னேற்றம் முன்னேற்றம் என்று முழங்குவதெல்லாம் முறையிற் பிறழ்ந்த மதியீனம்" என்று சைனா தேசத்து வித்தகர் சாங்ட்ஸூ என்பவர் இரண்டாயிரத்து நானூறு வருடங்களுக்கு முன் உரைத்த சொற்கள் உறவுறப் பொருந்தும்.

சாங்ட்ஸூ என்னும் அச்சீன வித்தகர், உபயோகமுள்ளவைகளை மனிதர் செய்வது எத்துணை உபயோகமற்ற காரியம் என்பதை எடுத்துக் காட்டி ஒன்றுஞ் செய்யாதிருப்பதன் உயர்வை உணர்த்தவே விழைந்தனர். "ஒன்றுஞ் செய்யாமல் இரு, எல்லாம் தானே செய்யப்படும்", என்ற கொள்கையில் ஆழ்ந்த நம்பிக்கையைக் கடைபிடிக்கின்றார் அவர். செய்கையைச் சிந்தனையாக மாற்றி, மீண்டும் அச்சிந்தனையை ஒன்றுடனும் சேர்க்காமல் நீக்கிவிடுகின்ற முயற்சியின் மேன்மையை அச்சீன வித்தகரும் நம் தாயுமானவரனைய சான்றோரைப்போல் நன்கு உணர்ந்திருந்தார். சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற திறமையின் அருமையைத்தெரிந்துகொண்டு மனதற்ற பரிசுத்தநிலையை வேண்டுவோர்தாமே மெய்யறிவுடைய மேலோராவார்.

பரோபகாரங்களென்றும், ஆட்சிமுறை அமைப்புக்களென்றும், கல்விவளர்ச்சி யென்றும், வர்த்தகப் பெருக்கமென்றும், பொதுவில், சனசமூகச் சீர்திருத்தங்களென்றும் பலபடப் பேசிப் பலபட முயல்வார், சாங்ட்ஸூவின் இம்மொழிகளைக் கேட்டுத் தலையசைத்துத் தோள்குலுக்கி உடல் சிலிர்ப்பார். நாமறிகின்றபடி நடைபெறும் சனசமூகத்தை அழிக்கவே சாங்ட்ஸூ நாடினார். இரக்கவல்லவர் அவராயின், ஏழைகளைக்காட்டிலும் செல்வமுடையவர்களைக் கண்டே அவர் அதிகமும் இரங்கினார். செல்வமும் வறுமையேபோல் துன்பம்மிக உடையது. பாவம், ஏழைகள் ஒருகால் இதனைமறுக்கலாம், மற்று, "இதனை மறுக்கின்ற செல்வவந்தர் எவரேனும் உளராயின், நன்று, அவர் விலாசம் எனக்கு வேண்டும்" என்னக் கார்லைல் கேட்பார். "ஒன்றினைச் செய்ய ஆற்றாமல் தோற்றேனே" என்று இரங்குவார்பால் அச்சீன வித்தகர் யாதும் பரிவு கூர்ந்திலர். அல்லது, இவ் வுலகவாழ்க்கை யென்னும் போட்டிப் பந்தய ஓட்டத்தில் தோற்றவர்களே உத்தமர்களாவா ரென்றும், அவர்களே கடவுளின் பரிசிலைப் பெறுவதற்குரிய பாத்திரர்களாவாரென்றும் கொண்டிலர். வெற்றியுந் தோல்வியுங் கிடக்க, போட்டிப்பந்தய ஓட்டமே கூடாதென்பது அவரது கொள்கை. இந்தியப் பண்டைய வாழ்க்கையின் தூய்மை இவ்வோட்டமும் பரிசிலும் இல்லாமையிற்றான் அடங்கியிருந்தது. இக்காலத்திலோ முன்னோட்ட முயற்சியலால் முன்னேற்ற முறையும் இல்லை. எனின், இனிப் பின்னே சென்றாலன்றி எங்ஙனம் வாழ்வோம்.

ஆம், சீனதேயத்துப் பண்டைய இச்சிந்தனையாளர், கழிந்துசென்ற ஒரு பொன்னுலகைக் கருதிக்கருதிக் கருத்தழிவா ராகின்றார். செய்கையால் இனி ஒன்று சாதிப்பதற்கு இருக்கின்றதென்று அவர் நம்பவில்லை. "கொல்லாமலே கொல்கின்ற இக் கல்விமுறைகளும், வெல்லாமலே வெல்கின்ற போட்டிப் பரீக்ஷைகளும், திருடாமலே திருடுகின்ற வர்த்தகத் தொழில்களும், திருந்தாமலே திருத்துகின்ற சீர்திருத்தக்காரர்களும், சமயப் பிரசாரங்களும், ஜீவகாருண்ய சங்கங்களும்

உரிமையைப் போதிக்கின்ற உபன்யாசங்களும், கடமையை வற்புறுத்துகின்ற கட்டுரைகளும் இல்லாமலிருந்த பண்டைய உலகமன்றோ பொன்னுலகம் எனக் கழிவிரக்கங்கொண்டு பெருமூச்சு விடுகின்றாரவர். அழகிய அக்காலத்தில் மனிதர் அன்புடையவராயிருந்தனர்; ஆயினும் அதனைத் தாம் அறிந்திலர், பிரசாரங்களோ செய்திலர்; வர்த்தமானப் பத்திரிகைகளுக்குத் தங்கள் புகைப்படங்களை அனுப்பினாரல்லர். சீரிய அக்காலத்தில் சனங்கள் நீதிதவறாத நியதியுடையவர்களாயிருந்தனர்; ஆயினும் சுயநயமற்ற தியாகங்களைப் பற்றிப் புத்தகங்கள் எழுதவில்லை, பிரசாரங்கள் செய்யவில்லை. உயரிய அக்காலத்தில் எல்லாரும் உபகாரிகள், எனினும், தாம் உபகாரம் செய்கின்றாரென்பது அவரறியார். அக்காலம், மனிதர் தாம் தாம் அறிந்தவைகளைத் தமக்குள்ளே வைத்திருந்தாராதலின், வீண் வாதங்களும் பொல்லாத வழக்குக்களும் புகுந்து அவர்களை உழக்கவில்லை. அக்காலம் ஒவ்வொருவரும் தத்தம் தருமத்தைத் தமக்கே வைத்திருந்தனராதலின், மற்றவர் காரியங்களில் ஒருவரும் தலையிடாமலிருந்தனர். ஆடம்பரமும் ஆரவாரமும் இல்லாதவோர் வாழ்க்கையை இனிதாக நடத்தினர் அக்காலத்தவர். கிடைத்த உணவை உண்டனர், கிடைத்த ஆடையை அணிந்தனர். இக்காலத்துப் பித்தர்போல் 'வாழ்க்கைத்திட்டத்தை' உயர்த்தவேண்டுமென்ற ஊக்கமொன்றும் அவர் கொண்டாரலர். அயலயல் ஊர்கள் இருந்தன; இவ்வூரில் குரைக்கின்ற நாயின் குரல் அவ்வூரில் கேட்தும்; அவ்வூரில் கூவுகின்ற கோழியின் குரல் இவ்வூரில் கேட்கும்; எனினும் ஊர்விட்டு ஊர் சென்று அளவளாவுதல்இன்றியே தம்காலத்தைக் கழித்தனர். சமர்த்தனிவனென்று ஒருவனை அவர் சிந்தித்ததுமில்லை, நல்லவனென்று ஒருவனை அவர் பாராட்டியதுமில்லை. கடன்பட்ட நினைவினால் திணறினாரலர். சரித்திரத்துள் சேரவல்ல புன்மைகள் யாதும் அவர் புரிந்திலராதலின், தம்முடைய சரித்திரம் ஒன்றும் எழுதப்பெறாத புண்ணியமுடையவர்களாயினர்.

மண்ணேயாகிக் கிடக்கின்ற இக்கால உலகத்தின் தோற்றத்திற்கு மாறாக நம் சீனவித்தகர் சாங் ட்ஸூ விழையும் பொன்னுலக வாழ்க்கையின் இலக்கணம் இது. முன்னேற்றமென்று கருதப்படுபவைகள் அனைத்தும் இவ் வழகிய வாழ்க்கையின் மேன்மையிலிருந்து நம்மை நெடுந்தூரம் விலக்கிக்கொண்டுபோய்த் தள்ளுகின்றனவாதலால், இம்முயற்சிகளையெல்லாம் ஒடுக்கிப் பண்டைய நிலைக்கே பரிந்து பின்செல்வதே நன்மையாம் என்று அவர் இயம்புவதில் பிழைகாணலரிது. இந்த நன்னிலை எவ்வாறு கெடலாயிற்று என்பதை இனி, அவ் வித்தகச் சீனரே பேசட்டும்—

"பொல்லாத வொரு வேளையில், பொதுஜன உபகாரி என்றொருவன் இவ்வுலகத்தில் தோன்றி, அரசியல் முறைகளை மனித வாழ்க்கைக்கு ஆதாரமாக்கத் தலைப்பட்டான். அன்றைக்கே பிடித்தது சனியன். 'மனிதரை அவரவர்பாட்டில் சும்மாவிட்டுவிடுவதன் சிறப்பையான் நன்கு அறிவேன்; மற்று, மனிதரை நலமுற ஆள்வதென்பதோ ஒருநாளும் ஆகாதகாரியம்' என்று சாங்ட்ஸூ முறையிடுகின்றனர். எவ்வகைஆட்சியும்தீயதே. மனிதனது இயற்கையைக் கெடுக்கின்றமையால் அரசியல் முறைகளெல்லாம் அநாசாரங்களே. அவரவர் இயற்கையை அடக்கினாலன்றி அரசாட்சி இல்லையாதலின், அத்தனையும் அதர்மமேயாம். கல்வியைப் பரப்ப முயல்வதாலேயே அரசியல் அமைப்புக்களெல்லாம் தம் அறியாமையைக் காட்டித் தருகின்றன. மனிதரைக் காக்க நிற்பதால் அவை தாமும் அழிந்து மற்றவர்களையும் அழித்துவிடுகின்றன. தீமையே செய்கின்ற அரசியல் அமைப்புக்களைக்காட்டிலும், மனிதர்களை நல்லவர்களாக்கவேண்டுமென்று முயல்கின்ற அமைப்புக்களே பின்னுங் கெட்டவை. ஏனெனில், மனித இதயம் இயற்கையிலே நல்லது; இதற்குள்ளே பரோபகாரம் கடனாற்றல் போன்ற எண்ணங்களைப் புகுத்தினால் இயற்கையாய அந்நன்மை குலைந்து அழிவதன்றி விளையவல்லது வேறொன்றுமில்லை. செயற்கைத் தருமங்களிலும் இயற்கை நன்மையே சாலச் சிறந்தது. மனித இதயத்தைப் பிழிந்தாலுந் தீது, அதனுள் அயலொன்றைப் புகுத்தினாலுந் தீதே. அரசியல் சட்டங்களெல்லாம் இவ்விரண்டில் ஒன்றையே செய்யுந் தரத்தன; ஆதலாற்றான், சட்டங்களால் இதுகாறும் சாதித்த நன்மை ஒன்றும் இல்லாமையோடு தீமையே மேன்மேலும் பெருகக் காண்கின்றோம். இந்த நிலை எய்தியபின், இனி இச் சனசமூகத்தை எவ்வண்ணம் பழுதுபார்க்கலாம் என்ன எல்லாரும் தத்தம் மனம்போனபடியெல்லாம் வாதிக்கத் தலைப்படுகின்றனர். "யாதானுமொன்று இனிச் செய்துதான் தீரவேண்டுமென்பது வெளிப்படை" என ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு, "இதனைச் செய்ய, திறமை வேண்டுமன்றோ, திறமை வருவது அறிவினாலன்றோ; ஆதலின் அறிவைப் பெறுதல்வேண்டும்" என்ன, "அறிவு அறிவு" என்று எதனையோ ஒன்றைப் பெறுதற்பொருட்டு எல்லோரும் விழுந்தடித்து ஓடி அலையத்தலைப்படுகின்றனர். இதன் விளைவு மிகவும் பயங்கரமானது. அறிவைப் பெற முயல்வதிலும், அறிவைப் பெற்றோமென்ற இறுமாப்பினாலும் இயற்றப்படுகின்ற கொடுமைகளைத் தடுக்கும்பொருட்டு அரசினர் அடக்குமுறையைக் கையாள நேர்கின்றது. இதனால் சனங்களிற் சிலர் சிறைக்கூடங்களில் வருந்த, அரசினர்தாமும் தம் சிம்மாதனங்களில் நடுங்கின்றவராகின்றார். இப்படியே எல்லாம் நிலைகுலைந்து தலைதடுமாறிக் குழம்பிக்கிடக்கின்ற சமயத்தில் சனசமூகச் சீர்திருத்தகாரர்களத்தினுள்வந்து தோன்றுகின்றார். தோன்றி, தாமும் தமது முறைகளுமே விளைவித்த தீமைகளினின்று தப்பும்வழிகளைப் பிரசங்கமேடை அதிர அதிரப் போதிக்கப்புகுகின்றனர். "பாவம், இந்த ஏழைச் சீர்திருத்தக்காரர்கள்! வெட்கமென்பது அறியார் ; நாணித் தலைகுனிவதற்கு வேண்டிய அறிவும் அவர்களுக்கு இல்லை" என்ன இரங்குவார்போல் அவர்களை இகழ்கின்றார், நம் சாங் ட்ஸூ.

மனித இயல்பையும் உலகசரித்திரத்தையும் உற்றுநோக்கி உண்மையை உணர்ந்திருப்பவர் யாரும் சாங்ட்ஸூவின் கருத்துக்களில் ஒன்றும் விபரிதங் காணமாட்டார். இக்கருத்துக்களைத் தனித்தனி எடுத்துப் பெருகப் பேசி வற்புறுத்தியுள்ள பிறர்சிலர் மொழிகளும் அவைகளின் ஆழ்ந்த பொருளும் இப்பொழுது நினைவின்கண் வருவதற்கு இயலும். அன்ன மொழிகள் பல இக்கலாநிலய இதழ்களிற் பலவிடங்களில் வந்தும் உள.

பொருளாதார முறைகளைப்பற்றியும் சாங் ட்ஸூ பேசாமல் விடவில்லை. அவர் கருத்தின்படி, செல்வத்தைத் திரட்டி வைத்தலே எல்லாத் தீமைகளுக்கும் காரணமாகின்றது. வலியோரைக் கொடியோராக்குவதும்

அது;எளியோரை அயோக்கியர்கள் ஆக்குவதும் அதுவே. சிறிய திருடர்களைச் சிருஷ்டிசெய்து சிறைக்கனுப்புவதுஞ் செல்வம்,பெரிய திருடர்களைச் சிருஷ்டிசெய்து சிம்மாதனத்தில்அமர்த்துவதும் அச்செல்வமே. போட்டிநினைவுகள் இச்செல்வம்என்னும் பேயின் வயிற்றினின்றேபிறக்கின்றன.மனிதனது மேன்மையை அடியுடன் கெடுத்தொழிப்பது ஒருவரோடு ஒருவர் போட்டிகொள்கின்றஊக்கமேயாம்.இயற்கையேசெல்வமாகநிறைந்துவாழ்கின்ற ஓர்நல்வாழ்வின் அமைதிக்கு மாறாக, மனிதமுயற்சியால் பெருகும் செயற்கைச் செல்வங்களே மானுட இன்பத்தை மாய்த்துவிடுகின்றன. இவ்வகைச் செல்வம் ஒரு நாட்டிலே பெருகப் பெருக, நல்லவர்க்குத் தக்க பரிசிலுங் கிடைப்பதில்லை, தீயவர்க்குப் போதிய தண்டனையுங் கிடைப்பதில்லை. கிடைத்தாலுந்தான் என்! நல்லவனென்று ஒருவனைப் பாராட்டிப் பரிசளிப்பதும், தீயவனென்று ஒருவனைக் கடிந்து தண்டிப்பதும்இரண்டுமே மனிதரை இழித்துவிடும். இவை யிரண்டும் பயிலாமல், செல்வ வளர்ச்சியில் மனம்வைத்தஎந்தநாடும்தன் காரியத்தை நடத்தல் இயலாது–(இக்கருத்துக்களோடு,முன்நாம், 'நல்லாள் நகை' என்னும் தலைப்புடன் வரைந்திருக்கின்ற தலையங்கங்களில் குறித்தவைகளை ஒப்புநோக்குதல் நலமாம்).

'வெற்றியே பெரிதென வழிபடும் இக்காலம் அழுகிக் கிடக்கின்றது' என்ற முடிவிற்கு நாம் சாங்ட்ஸுவின் கருத்தின்படி வரவேண்டியவர்களாக இருக்கின்றோம். இவ்வெற்றிக்கு ஆதார மாகவேண்டுமென்றே கல்விமுறைகள் கையாளப்படுவதால், இந்தக் கல்வி அயோக்கியர்களை வளர்த்து உலகினிடைத் திரியவிடுகின்ற செவிலித்தாயே ஆகின்றது என்கின்றார் சாங்ட்ஸு. செல்வப்பெருக்கம் அயோக்கியர்களைப் பிறப்பிக்கின்றது; நம்முடைய கல்விமுறைகளோ ஒரு அயோக்கியனை மற்றொரு அயோக்கியனைவிடச் சாமர்த்தியசாலி ஆக்குகின்றது;நடைபெறும்பள்ளிக்கூடங்களால் கைவந்த பயன் இன்னதே. மெய்யறிவினை ஒருவரும் கற்பதென்பதேனும் கற்பிக்கின்றதேனும் இயலாது. அஃதோர் ஆன்ம நிலை; இயற்கையோடிணங்கி வாழ்கின்றவர்களே அதனை எய்துவார்.

இரண்டாயிரத்து நானூறு வருடங்களுக்கு முன் சீனவித்தகர் இவர் வழங்கியஉரைகள் இவைஉண்மையல்லவென்று மறுப்பார் உளராயின், அவர்தம் அறியாமையையேனும் நெஞ்சுறுதியையேனும் நாம்வியக்க வேண்டியவர்களா யிருக்கின்றோம்.

---

# சூளாமணி

[11-வது பக்கத் தொடர்ச்சி]

## நாட்டுப் படலம்

சுருங்கக் கூறுமிடத்து, அச்சுரமைநாடு, வானகத்திருந்து கீழேபாயும் வானாறேபோலத் தோன்றும் அருவிகள்நிறைந்த மலைகளை ஒருபுறத்தும், அவ்வருவியே கீழே வெள்ளிடையில் பாய்வதுபோல முல்லைப்பூக்களினின்று பெருகி அருவியாகப் பாயும் தேனிறைந்த முல்லை நிலத்தை ஒருபாலும், (அத்தேனே கிண்ணங்களில் நிறைந்தாற்போலத்) தேனோடு விளங்கும் கருங்குவளை மலர்கள் பூத்துப் பொலிகின்ற நீர்வளம் மிக்க மருதநிலக் கழனிகளை ஒருசாரும் (அத்தேன் வழிந்து பாயும்)நெய்தனிலக்கடலை ஓரிடத்துமாக அணிபெறக் கொண்டு விளங்கிப் பாலை என்பதற்கே தன்னகத்துச் சிறிதும் இடம் இன்றிப் பொலிவெய்தி, நானிலமும் தம்முள் கலந்து நிற்பதால், தன்னிடத்தே பொற்றிரு ஆரவாரிக்க அவ் வாரவார வடிவாகத் திகழ்கின்றது.

ஊர்வனபோல ஊர்ந்துசென்று நானிலத்தையும் ஒன்றின்பின்ஒன்றாக முற்றும் வரிசையாக நோக்கிப் போகும்முறையைக்கைவிட்டு, மேலிருந்துநோக்கி மகிழும் இமையோரைப்போல, அந்நாட்டினது அழகை ஒருங்கே,தோலாமொழித்தேவர் கண்கொண்டுநாமும் காண்போம். காட்சியினும் கேள்வியே முந்தியதாகலின், முன்னர்க்கூறிய அப்பொன்திரு ஆரவாரம் நானிலத்திலும் நிகழ்வதைக் கேட்கலாம். இன்பத்துக்குப் போக்குவீடாக அந்நாட்டினர் ஆடிப்பாடி முழங்கும் ஓதையே முதலில் நம் செவிக்கு எட்டுகின்றது.

குன்றக் குறவர்களது வீட்டு முற்றங்கள்தோறும் அகவொழுக்க முறைபற்றியும் புறவொழுக்க முறை பற்றியும் முருகனை வழிபட்டு வெறியாடும் ஒலியே,கடவுளையும் அந்நாட்டு மக்களின் களவொழுக்கத்தையும் நினைப்பூட்டி நம் காதைக் கவர்கின்றது. அதற்கு ஒத்தாற்போல, இரைத்துச் சென்று வீழும் அருவியினோசையும்இன் னியமென ஒலிக்கின்றது.அம்மலையிலே, தன்னொடு பொருத புலியைக்கொன்று வெற்றி பெற்ற யானையானது, தனது களைப்புத்தீர அருவியிற் குளிப்பதற்கு முன்னர், அப்புலியை அஞ்சிநின்ற தன் பிடியையும் கன்றையும் உடன்வந்து நீராடிக் களிக்கும் பொருட்டு அழைக்குமுகமாக, வெற்றிமுழவம்போல முழங்கும் முழக்கமும் அவ்வருவியருகே எழுகிறது. இக்காட்சி என்றும் நிகழ்வதைக் கண்ணாரக் கண்ட வானவரும் களித்துத் தம் இசைக்கருவிகளை எப்போதும் முழக்கிக்கொண்டிருப்பதுபோல, முகில்கள் அம்மலைமீது நிலையாக நின்று அதிர்தலும் கேட்கின்றது. இஃது ஒருபுறம்.

மற்றோர்புறம் திரும்பினாலோ, முல்லை நிலத்திலே, ஆவினை அன்போடுபுரக்கும்இடையர்கள்தம்மறத்தோளின் தினவடங்கவும், மணமாலைசூட்ட நின்ற பெண்களைத் தழுவவும் விழைந்தனராய் முன்வந்து, மதர்த்தோடி எதிர்த்தாரைக் குத்திக் கொல்லும் செங்கண் எருதுகளைஇளங்கன்றெனப்பிடித் தடக்குவது கண்டு சூழ்ந்து நின்றவர்கள் மகிழ்ந்து கொட்டும் பறையொலி காது செவிடுபட முழங்குகிறது. இவ்வாறு ஒருங்குசேர்ந்து ஏறுகோள் திருநாள் நிகழ்த்தியபின், அவ்விடையர்கள் வேறு வேறு சிறுசிறு கூட்டங்களாகப் பிரிந்து, கொன்றைக் காயைக் குழலாகக்கொண்டு இசைத்திறம் காட்டி ஆவினம் மகிழ ஊதுவதும் நமது காதிலே தேனைச் சொரிகின்றது. உழுதற்றொழிலையும் இவ்வாறு பொழுதுபோக்காகவே கொண்டு கலப்பை ஏந்திச்சென்று களித்துத்திரிந் தாடி யுழுது ஆரவாரிக்கின்றனர். இம்மூவொலியும் மாறிமாறி வெள்ளிடையிலே எதிரொலியாகி நம் காதிற் புகுகின்றன.

ஊர்ப்புறமாக நோக்கினால், கண்ட கண்ட இடத்திலெல்லாம், கடவுட்பெண்களை ஒத்த மகளிர் ஒருங்கு

கூடிக் கூத்தாடுவதற்கேற்ப ஒலிசெய்கின்றமுழவமும், ஓசையே செல்வமெனக் கொண்டாடும்படியாகத் திருக் கோயிலினுள்ளே ஓமென ஒலிக்கும் திரண்ட திருச்சங்கமும், காதலனும் காதலியும் திருமணம் செய்துகொள்கையில் அவர்களை வாழ்த்தி முழங்கும் மணமுழவும்,வயலிலே, கிணையொலி நாவலோசை முதலிய ஒலிகளும்,ஒன்ருக இயைந்து, அந்நாட்டகத்தே ஒருங்கு நிகழ்கின்ற திருவிழாவும், இன்ப உழவும் காதன்மணமும் மாறுபாடின்றி ஒன்றிநின்ற தன்மையை இசைத் தினிது காட்டுகின்றன.

கடற்புறத்தே மரக்கலத்திலே ஏறிக் கடல்மீது உலவுகின்ற பரதவர்கள் பொழுதுபோக்காகக் கொட்டிக் களிக்கும் நாவாய்ப் பறையும்,மீன்பிடிக்கச் செல்வார் ஆரவாரத்தோடு கொட்டிச் செல்லுகின்ற மீன்கோட் பறையும், சுறு முள்ளில் தம் கடவுளை வைத்து வழிபடும்போது ஒலிக்கும் பலவகை இன்னிசைக் கருவிகளும், அவர்களுடைய வழிபாட்டையும் விளையாட்டையும் வயிற்றுப்பிழைப்பையும் ஒன்ருகப்பிணைத்து இன்னிசையாக்கி முழங்குகின்றன. பரதவப் பெண்கள் ஈன்று எடுத்தபின் அவர்கள்மார்புமீதும் மடியின் மீதும் தவழ்ந்து விளையாடுவதை மறத்தலின் பரதவச் சிறுவர் என்ற பேரும் மறையக் கடலம்மையின் பிள்ளைகளே யாகின்றனர். பாலொழுக நின்ற தாயின் முடைநாற்றத்தையும் நறுநாற்றமாகக் கொண்டு தம் தாயோடு ஆடும் குழந்தைகளைப்போல, இச்சிறுவர்களும், தமது இயற்கை யன்னையாம் கடலம்மையின் புலவு நாற்றம் வீசும் நீரினைப் புறக்கணிக்காமல் அதனையே சிறப்பாகக்கொண்டு, அவ்வம்மையின் மடிமீதும் மார்புமீதுமாக அலைகளின் கீழும்மேலுந் தவழ்ந்து குதித்து விளையாடுகின்றனர். அந்தக் கடலின் இச்செல்வச் சிறுர்கள் ஒருவரோடொருவர் இகலி 'யானே வென்றேன், யானே வென்றேன்' என முன்னே சென்று நீர்மூழ்கி மணலெடுக்கும் விளையாட்டில் ஈடுபட்டு,தாந்தாம் பூண்டிருந்த அணிகளையே மூழ்கி யெடுக்கும் பொருள்களாக வீசி யெறிந்தபோது, எறிவதும் எடுத்து மேல்வருவதும் ஒரே பொழுதில் நடப்பதுபோலத் தோன்றலின், அப்போதே அவர்களனைவோரும் கூடி வென்ருனைப் பாராட்டி ஆரவாரிக்கின்றனர். கடற்கரை மரங்கள் அடர்ந்தும் இருண்டும் நீண்டும் கிடக்க, அவற்றினிடையிலும் சுற்றிலும் வெண்மணல் நிலவெறிப்பதுபோலத் தோன்றவே, கடலானது, அந்நெய்தல் நிலத்தின் இன்பத்தைக் கண்டு அதனிடையே உலவும் விருப்பினேடு புகுந்து அலையை வீசுதலால் எழுகின்ற ஓசையும் ஓயாது ஓங்கி வளர்கின்றது.

தொலைவில் இருந்தே நமது காதையும் கண்ணையும் கவர்ந்த காட்சி இவ்வாருக, நறுநாற்றத்தால், நம் மூக்கைக் கவர்ந்து, கண்ணுக்கும் களிப்பூட்டித் தேனைச் சொரிந்து நாவிலும் நீரூறச் செய்யும் பூக்களின் பொலிவே இதன் பின்னர் நமது மனதைக் கவர்கின்றது.

கொய்வதற்காக அருகே நின்ற பெண்கள் தம் கையை நீட்டி அங்கையை விரித்து நின்ருற்போலத் தோன்றும் செங்காந்தட் பூக்களும், பூஞ்சுனையிலே நீராடப் புகுந்த மகளிர் தமது கண்ணில் பூசிய மை நீரில் கரைந்து பரவியதுபோல விளங்கும் நீல மலர்களும், தலைவனைப் பிரிந்து அவன் வருவதாகக் குறித்துச் சென்ற கார்காலம் வரும்வரையும் காத்திருந்து பின்னர் மழைநாள் வந்தபோது, உடல் பசந்து நின்ற தலைவி, வேங்கை மரத்தை நோக்கி நிற்ப, அத்தலைவியின் உடலேபோலப் பசந்து பூத்துவிளங்கும் வேங்கைப் பூக்களும், செம்மை கருமை பொன்மை என்ற பல நிறங்களைக் காட்டி நன்ருக மலர்ந்து சொரிந்த தேனனது நீண்ட அப் பெரிய மலையிடத்தெல்லாம் புத்துருக்கு நெய் வெள்ளமாகப் புரண்டாற்போல விளங்குகிறது.

அதற்கருகே வெள்ளிடையாய்க் கிடக்கும் முல்லை நிலத்துப் பொதுவிடங்களில் கூடியிருக்கும் கோவலர்களுக்கு நறுமணம் ஊட்டுவாரை அவ்விடத்தே காணலாம்.கொன்றைமரத்திலும் குருந்தமரத்திலும்சிறந்த வெண்காந்தட்செடியிலும், அவர்கள் வீட்டின் முற்றத்திலே நிழற்பந்தராய் நின்ற முல்லைக் கொடியிலும் போதாய் நின்ற பூக்களிலே தேன் பெருக்கம் இடையருது ஒழுகுதலின் நிலையாகின்று தேனீக்கள், அங்குள்ளவிருந்தையுண்டு, தம்இன்பத்திற்குப்போக்குவீடாக அப்பூக்களில் ஊத, அந்தப் போதுகள் நன்ருக மலர்ந்துவிளங்குதலாலவற்றின்மணம் எங்கும்பரவும்போது மன்றிலுள்ளாரும் அதைத் துய்க்கின்றனர்.

ஊர்ப்புறங்களில், தன்னை மாறியும் பிறர்க்குதவும் பெரியோரைப்போலத் தான் பூத்து மலர்ந்த வுடனே வாடவேண்டுவதையும்நோக்காமல் பிறருக்கு நன்மணமூட்டிப் பயன்படுத்துவதொன்றையேகருதி, நாலுபுறமுமும் மணம்வீசுவதற்கென்றே மலர்ந்த நெய்தற்பூவிலும், இதற்கு மேலும் ஒரு படி உயரச்சென்று உலகிற்குதவவேண்டிப் புத்தம் புதிய தேன்குழம்பைக் கையிலேந்தி மலரும் செந்தாமரைக் காட்டிலும் வண்டுகள் ஏறி அவற்றின் மெல் லிதழிலே ஊன்றவும், அதனைப் பொருட்படுத்தாமல், அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல, அவ்வூன்றலே, ஊன்றுவாரின் வறுமையைக் காட்டுகின்றதெனக் கொண்டு அவர்க்கிரங்கித் தேனைப் பொழிய, அவ்வாறு கீழ்வழியும் தேன் எங்கும் பரந்து ஊறிக்கிடப்பதால் எப்போதும் அம் மருதநிலத்தில் அத்தேன் ஊற்றுப்பெருக்குப்போல இடையருது ஒழுகுகின்றது.

# அப்பர்

## அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[44-வது பக்கத் தொடர்ச்சி]

### 2. முருகக் கடவுள் ஆரியர் தெய்வமா தமிழர் தெய்வமா?

முருகக்கடவுள், ஆதியில் தமிழர் கொண்டாடிய தெய்வமா அல்லது ஆரியர் கொண்டாடிய தெய்வமா எனவினவுவோமாயின்இதில் அபிப்பிராயபேதங்கள் பலஉள. தமிழ்நாட்டில் வசித்தவரும், திருக்குறள் திருவாசகம்முதலிய பலநூல்களைமொழிபெயர்த்தவரும், தமிழிலக்கண வித்வானும் ஆகிய ஆங்கிலேயப் பாதிரி போப்பையர் அவர்கள், ஆதியில், தமிழர்களால் பரம் பொருளென்று கொண்டாடப்பட்டது முருகக்கடவுளே யென்றும், அது ஒருமுகக் கடவுளாய் வழிபடப் பட்டதென்றும்,பின்னர் ஆரியசம்பர்க்கத்தால் சிவவழிபாடு ஏற்பட்டதென்றும், சிவபெருமானது குமாரர்களாய்க் கருதப்பெற்ற கணபதி சுப்ரமண்யர் என்னும்

இருவரில் சுப்பிரமண்யரென்னும் ஆறுமுகக்கடவுளை முருகக் கடவுளே யென்று தமிழர் நம்பும்படி ஆரியர் செய்தனரென்றும், இன்னும் பல குறிப்புக்களையும் சித்தாந்ததீபிகை யென்னும் ஆங்கிலப்பத்திரிக்கையில் வெளியிட்டார். அன்னதற் கேற்றவாறு முருகக்கடவுள் ஒருமுகக் கடவுளாகப் பல தலங்களில் காணப்படுகின்றார். இதன்றியும் தமிழ்நாட்டில் குறிஞ்சி நிலத்திற்குக் கடவுள் சேந்தன் என்று நமது இலங்கணங்களும் கூறும். மருதத்திற்கு இந்திரனையும், நெய்தலுக்கு வருணனையும், முல்லைக்குக்கண்ணனையும் கடவுளாகக் காட்டியிருப்பினும், உயர்வரைத் தெய்வமான முருகக்கடவுளுக்கு அவர்களை ஒப்பிடவில்லை.

ஆரிய புராணங்கள் பதினெட்டில், ஸ்கந்தம் (அதாவது கந்தபுராணம்) ஒரு புராணமாக எடுக்கப்பட்டிருக்கின்றது. அப்புராண சரிதையை யொட்டிச் சுப்ரமண்யக் கடவுள் ஆறு தலையும் பன்னிரண்டு கண்களையும் உடையவரெனவும், அவர் சிவகுமாரரில் ஒருவர் என்றும் கருதப்பட்டார். ஆனால், கந்தன் புராணமோ "ஒரு பதினாயிரம் இலக்ஷங் கிரந்தங்கள் உடையது" என்றும் காலக்கிரமத்தில் பல மாறுதல் அடைந்தது என்றும் கூறப்படுகின்றது.

ஏதி லாக்கற்ப மெண்ணில சென்றன
ஆத லாலிக் கதையு மனந்தமாம்
பேத மாகுமப் பேதத்தி னுள்விரித்
தோது காந்தத்தி னுண்மையைக் கூறுகேன்

எனக் கந்தபுராண அவையடக்கத்தில் கச்சியப்ப சிவாசாரியசுவாமிகள் மொழிவது காண்க. ஆகையால்இக் கந்தபுராணமானது, வடநூலின் மொழிபெயர்ப்பன்று. அதைத் தழுவிச் சற்று ஆராய்ச்சி முறையில் இதிகாச வகையாய்த் தமிழில் எழுதப்பட்டதாகும். அதற்குக் காரணம் பின்வருமாறு—

வடமொழியில் முருகக் கடவுளை முழுமுதற் கடவுளெனச் சூத புராணிகர் வற்புறுத்தவில்லை. ஆனால் தமிழ்நாட்டில் முருகக்கடவுளே சிவபெருமான் எனக் கொண்டாடப்பட்டனர். அதற்கு அப்பர் தேவாரத்திலும் அத்தாட்சியுண்டு—

முன்னை யார்மயி லூர்தி முருகவேள்
தன்னை யாரெனில் தானோர் தலைமகன்
என்னை யாளுமி றையவ னெம்பிரான்
பின்னை யாரவர் பேரெயி லாளரே.

—திருப்பேரெயில் - திருக்குறுந்தொகை.

முருகன் என்னும் திருநாமம் வடமொழியில் காணப்படாததாகும். கந்தபுராணம், உற்பத்தி காண்டம், திருவிளையாட்டுப் படலத்தில்* காங்கேயன் சரவணபவன், கார்த்திகேயன், கந்தன் என்னும் பல நாமங்கள் பகரப்பட்டனவே யன்றி முருகன் என்கின்ற தமிழ்த் திருநாமமோ கூறப்படவில்லை. இத்துடன் தமிழர்தம் மரபிற்கேற்ப, பஞ்சானனனான சிவபெருமான், தனக்கும் ஆறுமுகம் உண்டென்றும், அம்முகங்களே கந்தனுக்குத் திருமுகங்களாய் வந்தனவென்றும், தனது சத்தியே அறுமுகன் ஆதலால் தங்களில் வேறுபாடு இல்லையென்றும் மொழிந்தார்எனக் கந்தபுராணத்தில் கூறப்பட்டிருக்கின்றது*. ஆயினும் வடமொழி நூல்கள் இதனை இவ்வாறு வற்புறுத்தியதாகக் காணப்படவில்லை. அப்பர் தேவாரத்தில்,

ஐயன்காண் குமரன்கா ணாதி யான்காண்
அடல்மழுவாள் தானொன்று பியன்மே லேந்து
கையன்காண் கடற்பூதப் படையி னான்காண் [காண்
கண்ணெரியால் ஐங்கணையோ னுடல்காய்ந் தான்
வெய்யன்காண் தண்புனல்சூழ் செஞ்சடையான்காண்
வெண்ணீற்றான் காண்விசயற்கருள்செய்தான்காண்
செய்யன்காண் கரியன்காண் வெளியோன் றான்காண்
திருவாரூ ரான்காணென் சிந்தை யானே

—திருவாரூர் - திருத்தாண்டகம்-8.

என்றது, நமது முன்னோர் குமரக்கடவுளை வழிபட்ட பாவனை யாகும். இவருக்குப் பிள்ளையார் † என்னும் திருநாமமும் உண்டு. ஆகையால் முருகக்கடவுள் முற்காலத்தில் தமிழ்த்தெய்வமே யென்பதும் பின்னர்வடமொழி நூல்களில் கொள்ளப்பட்டுச் சிவகுமாரனாக ஆக்கப்பட்டு ஆரியரால் பரிவாரதேவதையாக மாற்றப்பட்டன ரென்பதும் விளங்குகின்றது.

---

*ஈங்கன நமது கண்ணி னெய்திய குமரன் கங்கை
தாங்கினள் கொண்டு சென்று சரவணத் திடுத லாலே
காங்கேய னெனப்பேர்பெற்றான்காமர்பூஞ்சரவணத்தின்
பாங்கரின் வருதலாலே சரவண பவனென் றானான்.
தாயென வாரல் போந்து தனங்கொள்பா லருத்த லாலே
யேயதோர்கார்த்திகேயனென்றொருதொல்பேர்பெற்றான்
சேயவன் வடிவ மாறுந் திரட்டிநீ யொன்றாச் செய்தா
யாயத னாலே கந்த னுமெனு நாமம் பெற்றான்.

—திருவிளையாட்டுப் படலம் 16 - 17.

* நன்முக மிருமூன் றுண்டா னமக்கவை தாமே கந்தன்
றன்முக மாகி யுற்ற தாரகப் பிரம மாகி
முன்மொழி கின்ற நந்த மூவிரண் டெழுத்து மொன்றா
யுன்மக னுமத் தோரா றெழுத்தென வுற்ற வன்றே.
ஆதலி னமது சக்தி யறுமுக னவனும் யாமும்
பேதக மன்றா னம்போற் பிரிவிலன் யாண்டு நின்றா
னேதமில்குழவி போல்வான் யாவையு முணர்ந்தான்சீரும்
போதமு மழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லன்.

—திருவிளையாட்டுப் படலம். 18-19.

† யானைமுகத்தையுடைய கடவுளான விநாயகரைப் பிள்ளையாரென்று அழைப்பதுதென்னாட்டில் சாதாரணம். அப்பிள்ளையாரும் சிவலிங்க வடிவாய்,வெல்லம், மஞ்சள், சாணம் முதலியவற்றில் பிடித்துவைத்துத் தொழப்படுவதைக் கவனிக்கவும்.

# ஷேக்ஸ்ப்பியர் நாடகக் காட்சித் திரட்டு

[41-வது பக்கத் தொடர்ச்சி]

## I. ஜான் அரசன்

### தாய்மையும் கைம்மையும் தழுவி நின்றவள்.

ஷேக்ஸ்பியர் படைத்த பாவைய ரெவரு முலகில் உண்மையினுலவிய மாதரென மதிக்கத்தக்கவர். அவராவார், காதல் சினம் அருள் மக்களிடத்துப் பேரன்பு முதலிய பல குணங்கள் குடிகொண்டு உலக இயற்கையில் எந்நாளும் நம்மெதிர்ப்படு நங்கையரே. இவர்தங் குணங்களைத் திரட்டிக்காட்டுவதும்,கதையினேர்படும் பற்பல நிகழ்ச்சிகள் காரணமாகஅக்குணங்கள்,தெரிவையரை யாட்கொண்டுமீறி, அவர்தங் நடையைமாற்றுவதைத்தெளியவைப்பதுமேஷேக்ஸ்ப்பியர் நாடகங்களின் சிறப்பு.

ஆர்தரின் தாயாகிய கான்ஸ்டன்ஸ் முதன்முதலில் நம்மெதிரேவந்து நாடகவரங்கிற் றோன்றும்போது, தன் கணவனையிழந்து அல்லற்பட்டு, அறியாப்பிள்ளையைக் கையிற்கொண்டு, பிலிப்ஸ் ஆஸ்திரியா அரசன் ஆகிய அவ்விரு வேந்தர்தம் உதவியை நாடி, இழந்து போன நாட்டைத் தன்மகற் கீட்டமுயன்றவளாய்க் காணலாயினள். ஆஸ்திரியா அரசன், ஆர்தரை அரியாதனத் தமர்த்துவேனென்று உறுதி கூறியபோது அக மகிழ்ச்சி பொங்க "ஓ, அவனது தாயின் வந்தனத்தை – ஒரு கைம்பெண்ணின் வந்தனத்தை–பெற்றுக் கொள்" என்று நன்றி நனி பாராட்டினாள்.

ஒருத்தி நற்குணங்கள்பல படைத்திருப்பினும் அவளிடத்தில் ஒன்றிரண்டு தீயகுணங்கள் காணப்படுவது உலகவியல்பு. இவளிடத்தும் பல நற்குணங்களோடு சினமென்னுஞ் சிறுதீயும் கரந்துஉறைந்தது. அதனால் பாட்டியாகிய **எலினர்** என்பவள் தன் பேரனாகிய ஆர்தரைப் புறக்கணித்துத் தன் பிள்ளையாகிய ஜானரசன் சார்பாகப் பேசியபோது, கான்ஸ்டன்ஸினுடைய சினமென்னுஞ் சிறுதீ பெருந்தீயாய் மண்டவே அவளும் உயர்குலமாதர்க் கொவ்வா மொழிகள் பல பேசினாள். தனக்கு உரிமையுண்டென்னும்உண்மையைத்தெரிந்தவளாதலாலும், பிறரெல்லாரும் ஒருங்குகூடித் தத்தம் நலமே கருதி, இளைய ஆர்தரது உரிமையை ஒழிக்கப் படிறுகள் பல செய்கின்றாரென் றறிந்தவளாதலாலும் அவளது அடங்காக்கடுங்கோபம் அளவு கடந்தது. ஆகவே, லூயி இளவரசனுக்கும் பிளாஞ்சு அம்மைக்கும் திருமணம்முடிந்தது என்றுஇவளை அரசர்பால்அழைக்கவந்த ஸாலிஸ்பெரி என்னும் ஆஸ்தானிகன் சொன்னபோது அவள் அதனை முதலில் நம்பாமல்—

"அவ்வாறன்று, பிறழ்ந்துரைத்தாய் : செவிவாய்ப் பட்டதை யுரைத்தாய்போலும். அஃதெங்ஙனமிருக்கும்? உன்னை நம்பாம லிருக்கவேண்டுமெனக் கோருகிறேன்; உன்மொழி, சாதாரண மனிதன் புகலும் ஒரு புரைமொழி. நீ சொல்வதற் கெதிராக ஓர் அரசனது உறுதிமொழியுண்டு[1]. என்னை யச்சப்படுத்தியதற்காக நீ தண்டிக்கப்படுவாய்! நானோ நோயுழந்து, பீதி கொண்டவள்; தீமை பல இழைக்கப்பெற்று வெருக்கொண்டவள்; உடையானை இழந்து கைம்பெண்ணாகிக் கலக்கம் கொண்டவள்; பெண்: அணங்காய்ப் பிறந்தணங்கெய்தியவள்[2]. இனி நீ பரிகசமொழிகள் சில பகர்ந்தாய் என்னினும் கலக்கமுற்ற வென்சிந்தை யமைதி கொள்ளாது; இந்நாள் முழுவது நடுங்கி விதிர் விதிர்க்கும்."

என்று இன்னபல பன்னியழுங்குந் தன் அன்னையை நோக்கி, ஆர்தர் அமைதியாய் இருக்க வேண்டினான். தனதுபிள்ளையே தன்னைத் தடுக்கின்றானென மனத்துட் கொண்ட மாது வெகுளியும் அன்புந் தோன்றப் புகலுமொழிகள் ஆர்தரது இயற்கையழகைத் தெரிவிப்பதால் அவற்றை யிங்கு எடுத்துக் காட்டுவோம்.—

"வாளா விருவெனப் பணிக்கும் பிள்ளாய்! நீ அருவருக்கத்தக்க முகத்துடன், அழகுமின்றி, பெற்றாள்குடர்எற்றெனக் கண்டோர்பழிக்கவேகிடப்பாயாயின்,

(1) ஆஸ்திரியா அரசன். அவன் ஆரம்பத்தில் ஆர்தருக்கோர் முத்தந்தந்து, "பிரெஞ்சுநாடும் இங்கிலாந்தும் ஆர்தரை மன்னனாய் ஏற்றாலன்றி நான் என்நாடு திரும்பேன்" என உறுதி கூறினான்.

(2) அணங்கு - அச்சம்; பெண்.

முகமுழுவதும் வெறுக்கும்வகை வெம்புள்ளிகளும் கட்டழகொழிக்கும் கறைகளும் தாங்கியே நிற்பாயாயின், முடவனாய் மூடனாய் கூனிக் கருத்து அஞ்சவருபேயென்ன வுருமாறித் தோன்றுவா யாயின், வனப்பழிக்கும் முகப்பருவும் காணவொண்ணாத் தழும்புந் தாங்கியிருப்பாயாயின், நா னுனைப்பற்றிக் கவலைகொள்ளேன். வாளாவிருப்பேன். ஏனெனி லக்காலை யுன்னிட மன்புகொள்ளேன். அப்போது நீ யுனது உயர்குடிப் பிறப்புக் குரியவ னாகாய்; மௌலி புனையும் பெருமைக்கு முரியவனாகாய். அவ்வாறன்றி, நீயோ எழில்நல மிக்குடையாய். நீ பிறந்த அந்நாள் இயற்கையும் நல்வினையும் ஒன்றுகூடி யுன்னைச் சிறப்பித்தன. இயற்கையின் நன்கொடையாக [1] முல்லையின் நிறமும் முகைவிரி ரோஜாவின் பொலிவையும் பெற்றுள்ளாய். அதிர்ஷ்டமோ? ஓ! அவ்வணங்கு நிலைகுலைந்து மாறி, உன்னைவிட்டு விலகிப் பிறர்வசமானாள். உரியவனாகிய உன்னை நீத்து உன் சிற்றப்பனுடன் நாழிகைதோறுஞ் சோரம்போகின்றாள். தன்[2] தங்கக் கைகொண்டு பிரெஞ்சரசனைச் சமிக்கை செய்தேவி, அவனையரசர்க்குரிய கௌரவத்தை இழக்கச்செய்து, தனக்கும் ஜானுக்குமிடையே தூதாகித் தங்கள் காமம் முடியுங் கருமங்களைச் செய்யத் தூண்டுகிறார்கள்.........

ஸாலிஸ்பேரி:–அம்ம, என்பிழைபொறுத்தருளல் வேண்டும். நீங்களின்றித் தனியே நான் அரசரிடம் செல்லலாகாது.

கான்ஸ்டன்ஸ்:—செல்லலாகும், செல்லவேண்டும். நான்உன்னொடு போகேன். எனது இன்னலை யிறுமாப்படையச்செய்வேன். ஏனெனில் துன்பந் தருக்குடையது, இறுமாப்புடையது. அதனால் அது கொண்டாரைத் தன்னை [3] வணங்கச் செய்கின்றது. என்னிடமும் எனது துன்பநிலையினிடமும் அரசரே வந்து கூடட்டும். எனது துயர் அளவிட்டுரைக்கவொண்ணாமல் மிக்கிருத்தலால் அதைத் தாங்கிநிற்கும் திறனுடைய திண்மண்ணுலகே யன்றி வேறொன்றில்லை. இங்கே நானும் எனது துன்பமும் உட்காருவோம். எனது அரியாதனம் இங்கே யுளது. அரசர்களை யீண்டெய்தி வணங்கச் சொல்.

(நிலத்தின்மேல் உட்காருகிறாள்:)

"பிறழ்ந்துரைத்தாய்......நானோ நோயுழந்து பீதி கொண்டவள்...கைம்பெண்ணாகிக் கலக்கங் கொண்டவள்" என்னுமிடத்து, அடக்கிய தன் துன்பம் மேன்மேல் வளர்வதாகிப் பெருந்தன்மையோடு அவள் பேசுந்திறம் நோக்கத்தக்கது. ஓதுவார் மனத்திலவள்பால் இரக்கமும், அவளது நிலையின் காரணமாக உலகவாழ்க்கையிலும் மனிதர் செயலிலும் வெறுப்பும் எழுக் கவி யெழுதியுள்ளது அவரது திறத்தைக் காட்டுகின்றது. "அவ்வாறன்றி நீயோ எழில்நல மிக்குடை

(1) ஐரோப்பியர் வெண்மையும் செம்மையும் உடையவர். முதல்நூலில் அல்லியின் நிறமென் றெழுதப்பட்டுள்ளது.

(2) தங்கக்கை - அழகிய கை - தங்கத்தைக் கைக்கூலி கொடுக்கும் கை - பிரெஞ்சு அரசனைத் தங்கள் அவாமுடிய அவர்களுடன் சேர்ந்து போர்புரியச்செய்து, அதற்குப்பிரதிபலனாக ஆங்கியர்ஸ் முதலிய ஊர்களை உதவுங் கை.

(3) துன்பமுழந்தவர் தளர்ந்து வணங்கிப் போவது இயல்பு. அது கொண்டார்—தைரியங் கொண்டவர் என்றும் பாடபேதம் உண்டு.

யாய்........" என்று தாயினன்பு தெரியச் சொல்லுமிடத்து, பிள்ளையின் உருவத்தில் அன்னை கொள்ளும் பெருமையைக் காண்க. இது இயற்கையின் செயலன்றோ? உண்மையும் இயற்கையும் விரவி, கவிவாணர் தன்மையை யெய்தித் தன்னை மறந்து அவள் பேசுவதுந் தாயினது தத்துவம். தனது பிள்ளையினழகினும் அவனது மேனோக்கினு மீடுபடா வொருதாயு முலகினுண்டோ? ஜான் அரசனையும், பிரெஞ்சு அரசனையும் பற்றிப் பேசும்போது அவள் மொழிகள் சினத்தொடு வருணனையும் பொருந்தியிருக்க அவளையும் ஓர் கவியே ஆக்கிவிடுகின்றார் ஷேக்ஸ்பியர்.

'இன்னலை இறுமாப்படையச் செய்வேன்.......'. என்ன, கம்பீரங்கொண்ட விப்பாகம், வானோக்கி யெழூந் தன்மைத்தாய், கற்பனை யலங்காரம் பொருந்திக் கவின் பெறுகின்றது. தான் நம்பிய அரசர் தன்னை வஞ்சித்துத் தங்கள் சுயநலமே பெருநலமாக் கருதிக் கோடைவெய்யிலிற் சுரத்திடை விட்டதுபோல், அவளைக் கைவிட்டு விலகியபோது, திகிற்பட்டெரிந்த அவள்மனம், துணுக்கமுடன் துன்பமெய்தி, கையற்றநிலைமையை யெண்ணிக் குன்றியதன்றே! அதனால் அவள் தன்மகனை யணைத்து அழுவதும் அவனழகையெண்ணுவதும், துன்பமும் இழிகுணவரசர்மாட்டுச் சினமும்கொண்டு பித்தம் பிடித்தவள் போலப் பேச ஆரம்பிப்பதும், நமது மனத்திடை யெவ்வகைக் குழப்பத்தை யுண்டுபண்ணுகின்றன! துயருற்றார் செய்வது நீதி தவறியதெனினும், முறையற்றதென மூதறிவினரெண்ணினும், துயருக்குஇரங்கிஅவரிடையேகண்ணலியல்பன்றோ? அதனைக் கவி விவரிக்கும் மேன்மையையெண்ணுந்தோறும் மனத்திடை யோர்விதக்கிளர்ச்சியுதிக்கும். "என்னிடமும் என் துன்பநிலையினிடமும் அரசர்வந் தீண்டுக" என்றவத் துன்பத்தரசிமுன் மற்றைய மன்னரும் வந்து தோன்றினர்கள்; தாங்கள்செய்தபிழை தம்மனத்தி லறிவுறுத்தலாலென்க. நியாயமின்றியும், காரணமின்றியும் இடுக்கண் வந்துற்றபோது, அல்லலுற்றவர் எத்துணைத் தாழ்ந்தோரேயாயினும் ஏழையாயினும், உயிர்குடிப் பிறந்தோறும் பெருஞ் செல்வரும் அவரிடை இரக்கங்கொண்டு அவரிருக்கும் இடத்தை நாடிச் செல்ல லுலகறி விடயம். ஆகவே மண்ணெனுஞ் சிங்காதனத் தேழ்மைத்துயர் வீற்றிருக்க, அத்திருவோலக்கத்திற்கு மன்னர் வருவதன்றி, அதற்கு மாறாக மறுக்கமொன் றுடையார் மன்னரிடஞ் செல்லமாட்டார் எனச் சாற்றினாள்.

---

# மதுரைக் கோவை

[45-வது பக்கத் தொடர்ச்சி]

## III. பாங்கற் கூட்டம்

### தலைவன் பாங்கனை நினைதல்

வாமத் துமைகண்ப னார்மது ராபுரி
வல்லிகண்பு
போமத் தனையென் றயருநெஞ் சேபுலம்
பாகொணமக்
கேமத் துணையுயிர்ப் பாங்கனுண் டேயவ
னின்பவெள்ளக்
காமக் கடலின் கரையிது காணென்று
காட்டுவனே. 48.

### பாங்கன் வாட்டம் வினுதல்

சுளியுங் கழைமதத் தெட்டானை யாலையச்
சொக்கர்வெற்பி
னெளியுஞ் சிலைத்தொழிற் போரண்ண லேநெஞ்சு
மாண்மையுந்தண்
ணளியும் பொறையு மழகுஞ்செங் கோன்மையு
மாயொருவர்
தெளியும் பொருளைத் தெளிவிக்கு நீயென்கொல்
தேம்புவதே. 49.

### உற்றதுரைத்தல்

உன்னெஞ் சறியுமென் கல்வியு மாண்மையு
மூறுபட்ட
தென்னெஞ் சறியுமற் றாறி வாரற
மென்றறியா
வன்னெஞ் சறைபுகு தார்சொக்க நாதர்
மதுரையன்னார்
தன்னெஞ் சறியு மவர்கண்க ளாலெம்மைச்
சாதித்ததே. 50.

### பாங்கன் கழறல்

இலங்காடல் வேற்படை யெத்தனை கோடி
யெதிர்பொரினுங்
கலங்காத நீயுங் கலங்கினை யேகற்ப
காலத்தினு
மலங்கார் வரிசிலை யார்சொக்க நாதர்
மதுரையன்னா
ரலங்கார வார்குழைக் கும்புறம் போமிரண்
டம்பினுக்கே. 51.

### கழற்றெதிர் மறுத்தல்

தேனா ரிதழித் திருவால வாயர்
சிலம்பிலொரு
வேனா யொருமயில் கைப்பட்ட பாவமொ
ரேழைக்குநீ
தானாக வேணுந் தலைவனண் பாவுன்
றனக்குநண்ப
னானாக வேணுமந் நாளல்ல வோவுன்னை
நான்சொல்வதே. 52.

### பாங்கன் கவன்றுரைத்தல்

கூலத் திரைவையை மண்கூறு கொண்டொரு
கூடைகட்டு
மாலக் களத்தா ராலவா
ரடக்குமந்த
காலக் கடையன்ன கண்ணார் நெடுங்கடைக்
கண்களென்னு
மோலக் கடல்கொண்ட தோவண்ண லாண்மையு
[1] மொண்மையுமே. 53.

(பிரதி.) 1. முண்மையுமே.

விதியோடு வெறுத்தல்

செறுக்கும் புரத்தர் திருவால வாய்நவ்வி
செவ்விகண்டு
மறுக்குந் தகையறி யாநெஞ்ச மேபல
வாசகத்தால்
ஒறுக்குந் துணையை வெறுத்தென் கொலேரபய
னூழ்வினையால்
வெறுக்குந் தகைமை விதியன்றி யாரை
வெறுப்பதுவே. 54.

பாங்கன் நொந்து கூறல்

வார்க்கோல நீல முலைத்தழும் பாளர்
மதுரையினம்
போர்க்கோல வார்சிலை யண்ணலுக் கோவொரு
பூங்கொடித
னீர்க்கோல மேகக் குழற்காடு கண்டு
நிறையழியும்
யார்க்கோவறிவு படுமறி வாளிக்
கிதுவரிலே. 55.

இடமும் வடிவும் வினுதல்

எங்கே யிருப்பதுன் வல்லிக்கென் [2]னும்வடி
வெய்துமிடம்
பங்கே ருகமலர் மாளிகை யோவிண்
பரப்படங்காக்
கொங்கே[ர்] கெடுஞ்சடை யார்சொக்க நாயகர்
கூடல்வெற்பா
அங்கே செலவு [3]மவருளப் பாடொன்
றறியவுமே. 56.

இடமும் வடிவு முரைத்தல்

காளக் களத்தர் கடம்பா டவியிடங்
கட்கடைகள்
வாளைப் பொருது குழைகிழித் தோடு
மருங்கறியேன்
பாளைக் கமுகிளஞ் சோலைநிற் பார்தம்
பணிவினவில்
வேளைப் பணிகொண்டு நிற்பதல் லாதொரு
வேலையின்றே. 57.

பாங்கன் வற்புறுத்தல்

விண்ணும் [4]பவன நிலையுஞ்செந் தீயும்
விரிபுனலு
மண்ணுங் கரந்துநிற் பார்மது ரேசர்
மணிவரைமைக்
கண்ணுங் குழையு முறவாடு கண்ணியைக்
கண்டனைநான்
நண்ணுந் தனையுமன் ருேவண்ண லேயிங்கு
ளைவதுவே. 58.

பாங்கன் குறிவழிச் சேறல்

மண்ணின் புறம்புரப் பார்சொக்க நாதர்
மதுரைவெற்பை
நண்ணும் பொழுதெங்ஙன் காண்குவ மோநம்மை
நம்புமண்ண
லெண்ணின் புறஞ்சென்ற கல்விபல் கோடி
யிரண்டுகயற்
கண்ணின் கடையிற் கடத்திநிற் பாரையக்
காவகத்தே. 59.

பாங்கன் தலைவியைக் காணுங்கோலென வருந்தல்

இந்நேரங் காவி னிடைபுகு மோவங்
கெழுந்தருளு
மந்நேர மாவ தறியும தோவால
வாயர்வெற்பின்
முன்னே யியங்கு முளரியங் கோதை
முகம்புகுந்து
தன்னே ரறியு முயிரென் கொலோ சென்று
சாதிப்பதே. 60.

(பிரதி.) 2. னுமவழ கெய்துமிடம். 3. மவாருளப்பாடென்.

(பிரதி.) 4. பவனி.

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

6-ம் பத்து, 3-ம் தசகம்

[27-வது பக்கத் தொடர்ச்சி]

5-ம் பாசுரம்.

கைதவம்செம்மைகருமைவெளுமையுமாய்
மெய்பொய்யிளமைமுதுமைபுதுமைபழமையுமாய்ச்
செய்ததிண்மதிள்சூழ்திருவிண்ணகர்சேர்ந்தபிரான்
பெய்தகாவுகண்டீர்பெருந்தேவுடைமூவுலகே.

அவதாரிகை:—முன்பாசுரத்தில்,நாம் வாழும் இந்த உலகத்தின் சிருஷ்டிமுதலியவைகள் பகவானின் அதீனமென்றுஆழ்வார்கூறினர். இப்பாசுரத்தில்பிரம்மா இந்திரன்முதலான வெவ்வேறுதேவர்கள் காத்துஇரக்ஷிக்கும்மூன்றுலோகங்களும் அவனின் அதீனமென்றும்,அவற்றை உற்பத்திசெய்து ரக்ஷிப்பது அவனின் உகப்புக்காகவே என்றும் அருளிச்செய்கிறுர். இம்மூன்று உலகங்களும் அவன் இயற்றியஉத்தியானவனம் (காவு=Pleasure park) என்று உரைப்பதால் அவனது உகப்புக்காகவே அவன்தான் சிருஷ்டிசெய்தானென்று சொல்லியபடி.

பொழிப்புரை:—(செம்மை- உள்ளும் புறமும் ஒத்த செய்கை. கைதவம் - இவை ஒவ்வாது ஏற்படும் அந்நியாய சிருஷ்டனை). பொய் நிஜம் யௌவனம் கிழத்தன்மை இவ்வகைகள் ரூபமாக எம்பெருமான் பிரம்மா இந்திரன் முதலான தேவதைகளைக் காப்பாகவுடைய பற்பல ஜந்மராசிகளடங்கிய மூன்றுலோகங்களையும் தேவ அதிகாரிகளையும் காக்கச் சிருஷ்டித்து அவைகளுக்கெல்லாம் பரிபூரண ரக்ஷகனுகிருன்.

---

6-ம் பாசுரம்.

மூவுலகங்களுமாயல்லனுயுகப்பாய்முனிவாய்ப் [ய்த்
பூவில்வாழ்மகளாய்த்தவ்வையாய்ப்புகழாய்ப்பழியா
தேவர்மேவித்தொழுந் திருவிண்ணகர்சேர்ந்தபிரான்
பாவியேன்மனதேயுறைகின்றபரஞ்சுடரே.

அவதாரிகை:—இப்பாசுரத்தில் அறியத்தக்க அம்சங்கள் இரண்டு—(1) முன் "மின்னிடை மடவார்" தசகத்தில் தன்னுடன் கலந்து பிரிந்தானென்றும் தன்னைப்பிறகு உபேக்ஷித்தானென்றும் பகவானேடு தான் கலப்பேனல்லேன் என்றும் நிச்சயம் செய்து அவனை

யநுஸந்திக்காத ஆழ்வார் இப்பாசுரத்தில் அவனோடு பரிபூர்ண கலவையைப்பெற்றேனென்று அறிவிக்கின்றார். இப்படி யறிவிக்குமிடத்தில் "பாவியேன்மனத்தே யுறைகின்ற பரஞ்சுடரே" என்பதால் (a) பகவான் தன்மனத்தில்குடிகொண்டானென்றும் (b) தான்அவ்வளவு அருளுக்கு ஈடல்லவென்றும் (c) தான் பக்தி மிகுந்திருந்தாலும் அல்பகுணங்கள் கலந்தவனாதலால் பாவிதான் என்றும் (d) இவ்வண்ணம் பாவியாகிய தன்னோடுபூர்ணமான சமகலவை ஏற்பட்டாலும் பகவானின் தேஜஸு ("பரஞ்சுடர்" அதாவது அதிசயமான ஜோதி) எள்ளளவுகூடக் குன்றாமல் பிரகாசிப்பதாகவும் தத்துவங்களை உபதேசிக்கிறார். (2) அன்னவாறு சிருஷ்டிவஸ்துக்களின் உள்ளே நின்று அவைகளைக் கடவுள் நடாத்தினாலும் அவைகளின் மாசுகள் தீக்குணங்கள் அவனை அணுகா என்று முன்னொரு பாசுரத்தில் கூறியிருப்பதை, 4-ம் பாசுரத்தில், 'அல்லனாய்" என்ற விடத்திலுங் காண்க. தன்னைப்போன்ற பெரிய பாவியின் அகத்துநின்று கலவை செய்தாலும் நிர்த்தோஷனாய்அவன் பிரகாசிப்பதை அதற்குத் திருஷ்டாந்தமாகக் கூறி விஸ்மய மடைகிறார்.

பதக் குறிப்புக்கள்.—பூவில் வாழ் மகளாய் - இலக்குமிக்கு அந்தராத்மாவாய், தவ்வையாய்-முன் பிறந்தவள்-மூதேவியாய், புகழாய் - இலக்குமி கடாக்ஷத்தால் நற்குண நற்செய்கை இயற்றுபவன் என்ற புகழ் உடையவனாய், பழியாய் - தீச்செயல்களின் பிரவர்த்தியால் உலகத்தார் பழிக்கு இடமாய்.

கருத்து.—இவ்வண்ணம், உலகங்களெல்லாம் சிருஷ்டித்து அதனுள்ளே புகுந்து சுபா அசுபங்களில் சம்பந்தப்பட்டபோதிலும் ஒரு தோஷமும் தட்டாதே தேஜஸுடன்விளங்கும் விண்ணகர் சேர்ந்தபிரபுவின் பெருமை வியக்கத்தக்கது.

குறிப்பு.—இலக்குமி—"உம்பர்" அதாவதுபரமபதத்திலிருக்கும் நித்திய ஸூரிகளில் ஒருத்தி. ஜந்ம வியாதியாகிய பிறப்பு இல்லாதவள். பிரகுமஹா ரிஷியின் புத்திரி, அம்மஹரிஷி இயற்றிய தபசின் பலனாகப் பிரஸாதம் அளித்து வந்தவள், வைகுண்டத்தில் பகவானோடு ஒருபோழ்துங் கலையாமற் கூடியிருந்து வரமளித்து வாழ்விப்பவள்.

---

### 7-ம் பாசுரம்.

பரஞ்சுடருடம்பாயழுக்குப்பதித்தவுடம்பாய்[னோர்
கரந்துந்தோன்றியும்நின் றுங்கைதவங்கள்செய்தும்விண்
சிரங்களால்வணங்குந்திருவிண்ணகர்சேர்ந்தபிரான்
வரங்கொள்பாதமல்லாலில்லையாவர்க்கும்வன்சரணே.

உரை:—பரஞ்சுடர் உடம்பாய் - வைகுண்டத்தில் பரவாசுதேவனாய் விளங்கும் மூர்த்தி; இவ்வுலகங்களில் போலன்றிக்கே பிருகிருதி சூக்ஷ்மங்களா லமையாமல் 'சுத்தஸத்துவம்' என்கிற அப்பிராகிருத தேஜோரூபமான மூர்த்திமானாய்; அழுக்குப் பதிந்த உடம்பாய்-மற்றுஎல்லா உலகங்களிலும்சராசரரூபமாய்ப் பல ஜீவாத்மா வஸ்துக்களின் அகத்திலிருந்து அவற்றை நடாத்துகிறபடியால் மாசுபடிந்த அந்த ஜீவாத்மா வஸ்துக்களின் ரூபமாய், கரந்தும் - இவ்வண்ணம் கடவுளாய் நடாத்துவது யாருமறியாதபடி மறைத்து வைத்தும், தோன்றியும் - இராமன் கிருஷ்ணன் முதலான அவதாரங்கள் எடுத்துத்தனது ஈசுவரத்தன்மையைப்பக்தர்க்குஒருவாறுவெளிப்படுத்தியும், கைதவங்கள் செய்தும் - சிலருக்கு அதாவது அஸூயாபார்க்கும் அசுரஸ்வாபவமுள்ளவர்க்கும் (சிசுபாலன், பவுண்டரீக வாசுதேவன் தந்தவக்கிரன் துரியோதனன் முதலானோருக்கு) மறைத்தும்; விண்ணோர் - நித்திய சூரிகளால் வணங்கப்பட்டவருமான, விண்ணகர் சேர்ந்தபிரான், வரங்கொள் - வேணுமென்று அபேக்ஷிப்பவர்களுக்கு அணுகி அருள்பெற உதவும், திருப்பாதங்கள் அல்லாமல், வன்சரண் யார்க்கும் இல்லை, - திருடமான வேறு ஆத்மரக்ஷண மில்லை.

---

## தமிழ்ப்பாடம் 104.

### வில்லிபாரதம்—உத்தியோகபருவம்.

[36-வது பக்கத் தொடர்ச்சி]

### கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

செஞ்சொன்முனி சஞ்சயனுக் கியாமுரைத்த
கருமமுமுன் சென்ற காலை
அஞ்சொன்முனி புரோகிதனுக் கவனிசைத்த
கருமமுநீ யறிதி யன்றே
நஞ்சுதனை மிகவருந்தி நன்மருந்து
மந்திரமு விரைந்து நாடா
தெஞ்சினர்தங் களைப்போல விருக்குமதோ
யார்மனத்து மிருக்குஞ் சோதி. (2)

பதவுரை.

யார்மனத்தும் - எத்தகையவருடைய மனத்திலும் இருக்கும்-தங்கியிருக்கின்ற, சோதீ-பேரொளியாகிய கிருஷ்ணனே!

செம் - செம்மையான, சொல் - மொழிகளைப்பேசுகின்ற, முனி சஞ்சயனுக்கு - சஞ்சய முனிவனுக்கு, யாம் - நாம், உரைத்த - சொல்லியனுப்பிய, கருமமும் - செய்தியும்; முன் - முதலில், சென்றகாலை-போனபோது, அம் - அழகிய, சொல் - சொற்களையுடைய, முனி புரோகிதனுக்கு - புரோகிதனான உலூக முனிவனுக்கு, அவன்-அந்தத் துரியோதனன், இசைத்த - சொன்ன, கருமமும்-செய்தியும், நீ-நீ, அறிதி அன்றே - அறிவாய் அன்றே! (ஆதலால்)

நஞ்சுதனை - விஷத்தை, மிக அருந்தி - அதிகமாகக் குடித்துவிட்டால், (அதனைப்போக்க) நல்மருந்தும் - நல்ல மருந்துகளையும், மந்திரமும் - மந்திரங்களையும், விரைந்து-விரைவாக, நாடாது - தேடாமல், எஞ்சினர் தங்களைப்போல் - கேடு அடைந்தவர்களைப்போல், இருக்கும் அது ஒ - நாமும் இருப்பது தகுதி ஆகுமோ!—(என்றான் தருமன்)

குறிப்பு:—சஞ்சயனுக்கு + யாம் = சஞ்சயனுக்கியாம், என இச்செய்யுளில், நிலைமொழியீற்றுக் குற்றியலுகரம் வருமொழிமுதலில் யகரம் வந்ததால்,குற்றியலிகரமாய்த் திரிந்தது.

---

அருஞ்சமரம் புரியும்வகை யவருரைத்தா
ராணு மறமொன் றின்றிப்
பெருஞ்சமரம் விளைக்குமது கடனன்றென்
றருள்வெள்ளம் பெருகக் கூறும்

பொருஞ்சமர நெடுமுரசப் பூங்கொடியோன்
தனைநோக்கிப் புயப்போர் வாணன்
இருஞ்சமரந் தொலைத்தபிரா னிளைஞரையு
முடனிருத்தி யியம்பு வானே. (3)

பதவுரை.

அவர் - துரியோதனுதியர், அரும் - செய்வதற்கு அரிய, சமரம் - யுத்தத்தை: புரியும்வகை - செய்யும் படி, உரைத்தார் ஆனாலும் - சொன்னபோதிலும் (நாம்), அறம் ஒன்று இன்றி - சிறிதும் தர்மம் இல்லாமல்; பெரும் - பெரிய, சமரம் - சண்டையை, விளைக்கும் அது - உண்டாக்குவது, கடன் அன்று - நீதி ஆகாது, என்று - என்று, அருள் வெள்ளம் - கருணையாகிய - வெள்ளம், பெருக-பெருகினவனுய், கூறும் - சொன்ன,

பொரும் - மோதுகின்ற, சமரம் - யுத்தத்திற்குரிய, நெடு - பெரிய, முரசம் - பேரிகையின் வடிவத்தை எழுதியுள்ள, பூ - அழகிய, கொடியோன் தன்னை - கொடியை உடைய தருமபுத்திரனை,

புயம் - ஆயிரம் கைகளால், போர் - போர் செய்யும், வாணன் - பாணுசுரனது, இரும் - பெரிய, சமரம் - யுத்தத்தை, தொலைத்த - அழித்த, பிரான் - கண்ணபிரான், நோக்கி - பார்த்து, இளைஞரையும் - அவன் தம்பியரையும், உடன் இருத்தி - கூட இருக்கச்செய்து. இயம்புவான் - பின்வருமாறு சொல்லலானுன்.

விளக்கம்.—கடன் அன்று என்று கூறும் பூங்கொடியோனை நோக்கி, வாணன் இருஞ்சமரம் தொலைத்தபிரான், இளைஞரையும் உடன் இருத்தி இயம்புவான், என, இச்செய்யுள் அந்வயமாகும்.

விரிவுரை:—கிருஷ்ணன் வாணுசுரனுடன் பொருது அவனை அடக்கிய கதை பின்வருமாறு:—பலிசக்ரவர்த்தியின் முதன்மைந்தனுன பாணுசுரன் (வாணுசுரன் என்பதும்ஒன்று) பரமசிவனைப் பூஜித்துப் பல பெரும்வரங்களைப் பெற்றுச் சோணிதபுரியில் அரசு விளங்குகையில், அவனது மகள் உஷைஎன்பாள்கனவிற்கண்ட ஒரு கட்டழகனைக்காமுற்று, அன்னுன், கண்ணபிரானது பேரனும், பிரத்யுமனனது புத்திரனுமாகிய அநிருத்தன் என்பதை அவள்தோழி சித்ரலேகை வரைந்துகாட்டிய சித்திரத்தினுல் உணர்ந்து, அத்தோழியின் உதவியாலேயே துவாரகையில்துயின்றிருந்த அவனைக் கட்டிலுடன் கொணர்வித்துத் தன் கன்னிமாடத்தில் ஒருவரு மறியாமல் அவனேடு சில காலம் மகிழ்ந்திருந்தாள். கண்ணனுடன் வழிப்பகை கொண்டிருந்த அவள் தந்தைஇது அறியவும், அடங்காச்சீற்றங்கொண்டு அநிருத்தனைத் கொல்லக்கருதித் தன்சேனையோடும் பொருங்கால், தனியாயகப்பட்ட அவ்விளவல் கதவின்தாழ்கோலல்லால்வேறோர்படைக்கலமுமின்றி நெடுநேரம் தற்காத்திருக்கவும், இறுதியில் வாணன் அவனை நகாஸ்திரத்தால் கட்டிவிட்டனன். நாரதனுல் இதனை அறிந்த கிருஷ்ணன் துவாரகையிலிருந்துவிரைவில் அவ்விடம்வந்து.பாணுசுரனை வென்று, சிவபிரான் வேண்டுகோளிற்கிணங்கி அவன் உயிரையும் கரங்களில் நான்கையும் வாங்காது விட்டனன்.

———

செய்வரா லினமுகளுந் திருநாடு
பெறநினைவோ சென்று மீளப்
பைவரா யருங்கானிற் பயின்றுதிரி
தரநினைவோ பகைத்த போரி
லுய்வரா ரெனவிரைவி னுருத்தெழுந்து
பொரநினைவோ வுண்மை யாக
ஐவரா மவனிபர்க்கு நினைவேதென்
றருள்புரிந்தா னமரர் கோமான் (4)

பதவுரை.

செய் - வயல்களில், வரால் இனம் - வரால்மீனின் கூட்டங்கள், உகளும் - துள்ளுகின்ற, திரு - அழகிய, நாடு - உங்களுடைய நாட்டினை, பெற - (எவ்விதத்திலாகிலும் நீங்கள் மறுபடி) அடையவேண்டும்என்பது, நினைவோ - எண்ணமோ ? (அல்லது)

மீளச்சென்று - மறுபடி போய், பைவர் ஆய் - நொந்தவர்களாய், அரும் கானில் - வசித்தற்கு அருமையான காட்டில், பயின்று - சஞ்சரித்து, திரிதர - அலைந்து திரிய, நினைவோ - எண்ணமோ? (அல்லது) பகைத்த - பகையால் விளைகின்ற, போரில் - சண்டையில், "உய்வர் ஆர்" என - நீ பிழைக்கின்றுயோ நான் பிழைக்கின்றேனே பார்ப்போம் என்று இருவரில் ஒருவர் மடிந்து விழும்வரையில் போர் முடிப்பதில்லைஎனத்துணிந்து, விரைவின் - வேகமாக, உருத்து எழுந்து - கோபித்து எழுந்து, பொர - கௌரவர்களுடன் போர்செய்ய, நினைவோ - எண்ணமோ !

ஐவர் ஆம் அவனிபர்க்கு - அரசர்களாகிய உங்கள் ஐந்துபேருக்கும், உண்மை ஆக - மெய்யாக, நினைவு ஏது - கருத்து யாது, என்று - என்று, அமரர்கோமான் - தேவர்களுக்குத்தலைவனுனகண்ணன், அருள் புரிந்தான் - கேட்டருளினுன்.

———

## இலக்கணம்

III. B. நிலைமொழியிறுதி உகரமாகவும் வருமொழிமுதல் யகர மெய்யாகவும் நிற்குமானுல், எவ்வாறு புணரும் என்று பார்ப்போம்.

i. இவ் விறுதி உகரம் குற்றியலுகரமாயின், வருமொழிமுதல் யகரமெய்யோடு அது புணரும்போது, (உயிரொடு புணர்வதுபோன்றே, வால்யூம் 6, பக்கம் 859) அக்குற்றியலுகரம், கெட்டுவிடுவதுமன்றி, அதற்குப்பதில் ஒரு இகரந்தோன்றி முன் குற்றியலுகரம் விட்டு விட்டுப்போன நிலைமொழியீற்றுமெய்யின்மேல் ஏறிக்கொள்ளும்.

முரசு + யாது = முரச் உ + யாது = முரச் + யாது
= முரச் இ + யாது = முரசியாது.

கொக்கு + யாது = கொக்க் உ + யாது = கொக்க் +
யாது = கொக்க் இ + யாது =
கொக்கியாது.

[அல்லது, குற்றியலுகரம் கெட்டு, இகரம் தோன்றியது என்பதற்குப் பதிலாய், அக்குற்றியலுகரமே இகரமாய்த் திரிந்தது என்று சொல்லினும் சொல்லலாம்—பின்வரும் விதியைக் கருதுங்கால் இவ்வாறு திரிகின்றதெனச்சொல்வதே தக்கதாகலாம்.]

ii. (a) இவ் விறுதி உகரம், முற்றிய லுகரமாயின் வருமொழிமுதலில் யகரம் வரின் பெரும்பான்மை இகரமாகத்திரியாமல், இயல்பாக அப்படியேஇருந்துவிடும்.

கொலு + யாது = கொலு யாது
பசு + யாது = பசு யாது.
சாம்பு + யாது = சம்புயாது:-(சாம்பு = பறை: இது வடமொழியாதலால், ஈற்றுகரம் குற்றியலுகரமன்று, ஆதலால் இகரமாகத் திரியவில்லை)

(d) எனினும், கதவு வரவு நிலவு என்பனபோல்

அவ்வுகரம் வகரமெய்யின்மேல்ஏறிமுடிகின்ற முற்றியலுகரமாயின், வருமொழிமுதலில் யகரம்வர, அதுவும் குற்றியலுகரம்போலவே இகரமாகத்திரிகின்றது.

வரவு + யாது = வரவ்உ + யாது = வரவ் + யாது = வரவ் இ + யாது = வரவியாது.

கதவு + யாது = கதவியாது.

[குறிப்பு:—குற்றியலுகரமாயினும், கதவுவரவு என்பனபோல்வகரமெய்யில்ஏறிமுடிகின்றமுற்றியலுகரமாயினும் வருமொழிமுதலில்யகரம்வந்தால்மாத்திரமேஇகரமாகத்திரியுமேயல்லாது, வேறு எந்த மெய்யெழுத்துவருமொழிமுதலில் வந்தாலும்இகரமாகத்திரியாது. பெரிது + பூனை = பெரிது பூனை; உழவு + மாடு = உழவுமாடு என இயல்பாகவே யிருக்கும்]

[இப்படி, யகரம்வருவதால்குற்றியலுகரம் திரிந்துஆகின்ற இகரத்திற்குக் குற்றியலிகரம் என்றுபெயர். இஎன்னும் உயிரெழுத்து உச்சரிக்கின்ற அளவு ஒரு மாத்திரை. ஆயினும், அது இவ்விதம் குற்றியலுகரந் திரிந்ததால் உண்டானகுற்றியலிகரமாகும்போதுகுற்றியலுகரம்போலவே, அரை மாத்திரை பெறுகின்றது. கத்தி, சொல்லி, என்பன போன்று இயல்பாக ஈற்றிலிருக்கின்ற இகரம் குற்றியலிகரம் அன்று. முன்சொன்ன விதியின்படி குற்றியலுகரம் திரிந்து ஈற்றில்நிற்கும் இகரமே குற்றியலிகரம். கேண்மியா, சொன்மியா, என வரும், மியா என்ற முன்னிலை அசை தமிழில் உளது. இம் மியா என்பதன் மகரத்தில்ஏறியிருக்கும் இகரமும் குற்றியலிகரம்].

iii. ட், ற் என்ற இரண்டு மெய்களின் மீது ஏறியுள்ள நெடிற்றொடர்க் குற்றியலுகரங்களும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களும், வருமொழிமுதல் யகரமெய்யோடு புணரும்போது, அக்குற்றியலுகரம் குற்றியலிகரமாய்த் திரிவதுமாத்திர மல்லாமல், உயிரோடு புணர்வது போன்றே—(6-வது வால்யூம் 871 வது பக்கம்) அக் குற்றியலுகரம் ஏறியிருந்த டகர றகர மெய்களும் சிற்சில சமயம் இரட்டும்.

இவ்வாறு இரட்டுவதைப் பண்புத் தொகையினும், ஆறும் வேற்றுமைத் தொகையினும், மற்ற வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைகளிலும் மட்டுமே காணலாம். மற்றத் தொடர்களில் அவை இரட்டுவதில்லை:—

களிறு + யானை = களிற் உ + யானை = களிற் + யானை = களிற்இ + யானை = களிற்ற்இ + யானை = களிற்றியானை. (களிறாகிய யானை என விரியுமாகையால், இத்தொடர் பண்புத்தொகை).

ஆறு + யாணர் = ஆற்றியாணர் - (ஆற்றினுடைய யாணர். ஆறும் வேற்றுமைத் தொகை) யாணர், என்பதற்கு அழகு என்பது அர்த்தம்.

காடு = யானை = காட்டியானை (காட்டில் வசிக்கும் யானை — ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை).

கோடு + யானை = கோட்டியானை — (இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை).

பகடு + யானை = பகட்டியானை (பண்புத்தொகை, மற்றத் தொடர்களில், உகரம் மாத்திரம் இகரமாய்த் திரியும். ஈற்று மெய் இரட்டாது.

(உ - ம்) களிறு + யாது = களிறியாது.

காடு + யாது = காடியாது.

[இவ்விதம், குற்றியலுகரம் குற்றியலிகரமாய்த் திரிந்து நிற்க இயலும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளாவிட்டால் சிலசமயம் செய்யுள்களின்பொருள் உணரமாட்டாமல் திகைக்கவேண்டி யிருக்கும். முத்தியாது—என்று வந்திருக்குமாயின், அது 'மோக்ஷம் என்பது என்ன' என்று பொருள்படலாம்; அல்லது 'முத்து (தாளம்) எது' என்றும் பொருள்படஇயலும். முதல் பொருளில் 'முத்தி'என்பதே பதம். ஈற்றிலுள்ள இகரம் குற்றியலிகரமன்று. மற்றப்பொருளில் முத்து என்பது பதம். அதன் ஈற்றிலுள்ள குற்றியலுகரம், யகரத்தோடு புணர்வதால் இகரமாய்த் திரிந்து நிற்கின்றது.]

---

# ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

## காஞ்சீபுரம் ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி ஸ்தோத்திரங்கள்

[47-வது பக்கத் தொடர்ச்சி]

3. இராகம்—மோஹனம்] [தாளம்—ரூபகம்.

பல்லவி

வரதராஜ பாஹி மாம் ஸதா—முதம் தேஹி................................(வரத)

அனுபல்லவி

கரிகிரீஸ சிவ ஸுரபதி—ஸரஸிஜபவாதி விநுத................................(வரத)

சரணம்

தேவ தேவாங்யதா கதி காஸ்தி ஸ்ரீபெருந்—
தேவி ஸஹித கருணாகர ஸ்ரீத்யாகராஜ விநுத................................(வரத)

பொருள்.

வரதராஜ - வரதராஜப் பெருமானே! மாம் பாஹி - என்னைக் காப்பாற்று; ஸதா - எப்போதும், முதம் தேஹி - ஸந்தோஷத்தைக் கொடு.

கரிகிரீஸ - ஹஸ்திகிரியில் கோயில் கொண்டுள்ள ஸர்வேச்வரனே! சிவ ஸுரபதி ஸரஸிஜபவ ஆதி விநுத - சிவபெருமான் தேவேந்திரன் (உந்திக்) கமலத்தில் தோன்றிய பிரமதேவன் முதலான தேவர்களால் கொண்டாடப் பட்டவனே! (மாம் பாஹி - என்னைக் காப்பாற்று)

தேவதேவ - தேவ தேவனே, ஸ்ரீபெருந்தேவி ஸஹித - ஸ்ரீபெருந்தேவி ஸமேதனாயெழுந்தருளி யிருப்பவனே! கருணாகர - கருணைக்கு இருப்பிடமா யிருப்பவனே! ஸ்ரீ

த்யாகராஜ விநுத - ஸ்ரீத்யாகராஜனுல் கொண்டாடப் பட்டவனே! அந்யதாகதி நாஸ்தி - உன்னைத் தவிர வேறு புகலிடம் எனக்கு இல்லை; (மாம் பாஹி - என்னைக் காப்பாற்று.)

குறிப்பு:—ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமியால் அருளிச் செய்யப்பட்ட ஸம்ஸ்கிருதக் கீர்த்தனைகளில் இது ஒன்று. கரிகிரி - வரதராஜப் பெருமானுடைய ஸந்நிதிக்கு 'ஹஸ்திகிரி' என்று பெயர். 'கரிகிரி' என்ற சொற்றொடரும் அதே பொருளையுடையதாம். ஸ்ரீபெருந்தேவி ஸஹித - காஞ்சீபுரத்தில் எழுந்தருளியுள்ள தாயாரின் திருநாமம் பெருந்தேவி என்பதாம். இது தமிழ்ப் பெயர். ப்ருஹந்நாயகி, ப்ருஹதாம்பா என்ற ஸம்ஸ்கிருதப் பெயர்களும் இதே பொருளுடையவை.

### மோஹன ராக லக்ஷணம்.

இந்த இராகம், 72 மேளகர்த்தா முறையின்படி 28 வது மேளகர்த்தாவாக விளங்கும் ஹரிகாம்போஜியில் ஜன்யமென்பது ஸாதாரணமாக அனைவருடைய அபிப்பிராயமுமாகும். சிலர் இதை 29-வது கர்த்தா ராகமான (தீர) சங்கராபரணத்தில் ஜன்ய மென்றும், வேறு சிலர் இது 64-வது கர்த்தா ராகமான வாசஸ்பதியில் ஜன்ய மென்றும் மற்றும் சிலர் 65-வது கர்த்தா ராகமான (மேச) கல்யாணியில் ஜன்ய மென்றும் கூறுகின்றனர். பெரும்பாலோருடைய மதம் முதலிற் கூறப்பட்டதாகும். ஸ்ரீ வேங்கடமகி முதலியவர்கள் கடைசியிற் கூறப்பட்ட மதத்தை அனுசரிக்கின்றனர். இது ஔடவஔடவராகம். மத்யம தைவதங்கள் வர்ஜ்யம். சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சதுச்ருதிதைவதம் இவைகள் ராகச்சாயா ஸ்வரங்கள். இந்த ராகத்தில் தாடு ஸ்வரப் பிரயோகங்களே விசேஷ ரஞ்சகத்தை யுடையவைகளாயிருக்கின்றன. "ஸகரிப கதபஸ - தரிஸ - தகரி - ததஸ - தஸஸ - தபக - பகப - ரிக - ஸரிஸ - ரிக - ரிப - கத - பஸ் - ஸரிகரிஸ - தஸரிஸ்த பதஸ்தப," முதலியவற்றைப் போன்ற பிரயோகங்கள் மிகவும் அழகானவை. எப்போதும் பாடத்தக்கது.

ஆரோஹணம்:—ஸரிகபதஸ்.
அவரோஹணம்:—ஸ்தபகரிஸ.

## ஸ்வர ஸாஹித்யம்.

### ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.
; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.
| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.
|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.
* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.
ஸரிகம— மேற்படி ஸஞ்ஜ்ஞையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.
பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.
ஸ்ரீக்ம்—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

[குறிப்பு:—இந்தக் கீர்த்தனை மத்யம காலத்திற் பாடப்பட வேண்டும்]

### பல்லவி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| காகா | கா-பா; பா | காகா | பா-ரீ; ஸா | தா; | ; ;ஸாரீ | கா ; | ; காகாகா |
| வர | த-ரா; ஜ | பா | ஹி-மாம்;ஸ | தா; | ; ; மு. | தம்; | ; தே.ஹி |
| காகா | கா-ஸரிகாகா | ரிகபா | பா-காரீஸா | தா; | ; ; ஸாரீ | கா; | ; காகாகா |
| வர | த-ரா . . ஜ | பா . ; | ஹி-மா-ம்ஸ | தா; | ; ; மு. | தம்; | ; தே. ஹி |

(வரதராஜ)

### அனுபல்லவி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஸ்தா | பாகாரீஸா | ரீகா | பாபாபாபா | ஸ்தா | பாகாரீஸா | ரீகா | பாதாதாதா |
| க ரி | கி ரீ. ச | சிவ | ஸுர பதி | கரி | கி ரீ. ச | சிவ | ஸுரபதி |
| ஸ்தா | பாகாரீஸா | ரீகா | பாதாஸ்ாஸ்ா | ஸ்ாகர் | ரீஸ்ாதாபா | காதா | பாகாரீஸா |
| க ரி | கி ரீ. ச | சிவ | ஸுரப தி | ஸ ர | வி ஜ பவ | ஆ. | தி விநுத |
| ஸ்தா | பாகாரீஸா | ரீகா | பாதாஸ்ாரீ | க்ாப்ா | க்ரிஸாதாபா | காதா | பாகாரீஸா |
| க ரி | கிரீ - ச | சிவ | ஸுரப தி | ஸ ர | வி. ஜ பவ | ஆ . | திவிநுத |

(வரதராஜ)

### சரணம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கா; | காகா; கா | ; ரீ | ஸா; தாபா | தாஸா | ரீ-கா ரீ | கா ; | ; ; ; ; |
| தே; | வதே; வா | ; ந்ய | தா ; க தி | நாஸ் | தி-ஸ்ரீ; பெ | ருந்; | ; ; ; ; |
| கா; | காகா; கா | ; ரீ | ஸா; தாபா | தாஸா | ரீஸரிகாகா | பா ; | ; ; ; ; |
| தே; | விதே; வா | ; ந்ய | தா ; க தி | நாஸ் | தி ஸ்ரீ . . பெ | ருந்; | ; ; ; ; |
| கா; | கா காரி கா | ; ரீ | ஸா; தாபா | தாஸா | ரீ ஸரி காபா | தா; | ; ; ; ; |
| தே; | வி தே; வா | ; ந்ய | தா; க தி | நாஸ் | தி ஸ்ரீ . . பெ | ருந்; | ; ; ; ; |

"தேவி ஸஹித.........த்யாகராஜ விநுத"—அனுபல்லவிபோல் பாடப்பட வேண்டும்.

கம்பராமாயணம்:—பதவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு, முதலியவைகளுடன் ஸ்ரீ. வை. மு. சடகோப ராமநுஜாசாரியார், சே. கிருஷ்ணமாசாரியார், வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரவர்களால் பதிப்பிக்கப்பெற்றவை. பால காண்டம் ரூ. 5. அயோத்தியா காண்டம் ரூ. 5. ஆரணிய காண்டம் ரூ. 4. கிஷ்கிந்தா காண்டம் ரூ. 4-8-0. சுந்தர காண்டம் ரூ. 5. யுத்த காண்டம் 2-பாகம் ரூ. 10. தபால் செலவு வேறு.
கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை.

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தாகாண்டம்—1. பம்பைப் படலம்

[38-வது பக்கத் தொடர்ச்சி]

கலங்கா வொருபொருள் புலம்பு மாறே.

அன்னதோர் தன்மைவாய்ந்த பம்பைப் பொய்கையினருகு நின்ற இராமபிரான், தன்னைவிட்டு நீங்கிய சீதையைக் கருதித்தளர்ந்து உருகுவானாகித் தன் நல்லுணர்வு ஒடுங்கிடப் புலம்பலுற்றான். ஒருபோதும் உணங்கலில்லா அவ்வுயர்பரம்பொருள் உணங்கிப்புலம்புமிதுவெல்லாம் பூண்டதோர் வேடத்திற்கிணங்கப் புரியுமொரு சிறுமாய விளையாட்டேயல்லாமல்வேறு யாவதே ஆதற் கூடும்! எம்பெருமான் தான் மனிதனென்றே காட்டும்பொருட்டுத் துயரமுடைமையைத் தெரிவிக்கின்றான். மனிதர் எனக்காட்டுதற்குமாற்றரும் அடையாளமாக எஞ்ஞான்றும் உடன்நிற்பது துயரமே. தான் அத்துயரமுடையவன் எனப் பொய்யும் புகலப்புகுகின்றமையால், எம்பெருமான் தான் மனிதனேஎன்னுஞ்சொல்லைப் பின்னும் வலிவுசெய்துகொள்ளமுயல்கின்றவனாகின்றான். இலக்குவன் மறைந்தானென்று முன்சென்ற அயோமுகிப் படலத்திலும், மீண்டுமவ் வருமைத்தம்பி மாய்ந்தனனென்று பின்வரும் பிரம்மாத்திரப் படலத்திலும், இராகவன் கல்லும் புல்லும் கண்டுருகும்படி கதறுவதற்கிடையே சீதையின் பிரிவிற் காற்றாமல் புலம்புமிதுவும் இந்நாடகக் கோலத்தின் ஒரு காட்சியே.

பிறர் வந்து பரிவுடன் பேசிவினவலால், தான்பட்ட துயர் ஒருவாறு தணியுமென்பது உலகவழக்கு. ஆதலின் இராமன், அப்பொய்கையின்கண் இருந்தபுள்ளினங்களை அண்மி,

வரியார் மணிக்கால் வாளமே
    மடவன் னங்கா ளெனைநீங்கத்
தரியா ணடந்தா ளில்லளேற்
    றளர்ந்த போதுந் தகவேயோ
எரியா நின்ற வாருயிருக்
    கிரங்கி னாலீ திசையன்றோ
பிரியா திருந்தேற் கொருமாற்றம்
    பேசிற் பூசல் பெரிதாமோ

[கோடுகள் அமைந்த அழகிய கால்களையுடைய சக்ரவாளமே, இளமை பொருந்திய அன்னங்களே! என்னை ஒருபோதும் விட்டுப் பிரியத் தரியாதவளாகிய சீதை இப்பொழுது பிரிந்துபோனாள். என்னிடத்தில் அவள் இல்லை என்றால், அதனால்நான் தளர்ந்திருக்கின்ற இச்சமயத்திலும், நீங்கள் என்முன் வராமலிருப்பது உங்களுக்குத் தகவு ஆகுமா! வருந்தி எரிகின்ற என் அரிய உயிரிற்குஇரக்கங் கொண்டால் அது உங்களுக்குக் கீர்த்தியாகாதா. இதுகாறும்சீதையைவிட்டுப் பிரியாதிருந்த என்னோடு ஒருவார்த்தைபேசினால், கலகம்ஏதேனும் பெரிதுவிளைந்துவிடுமோ] எனக் குறைகூறுவானாயினான். வாளமும் அன்னமும் இவன்பால் யாதுஉரைக்கவேண்டினானென்னத் தேர்தல்அரிது. "ஏ, மதியிலி, இளையவன் விலக்கியும் அதுகேளாமல், இல்லாதன இல்லை இளங்குமரா எனப் பொருளுடையதுபோன்று பொருளில்லா ஒரு விரகுடையவாசகத்தால் அவன் வாயைஅடக்கிவிட்டு மாயமானின்பின் போன பாவம் சீதையைஇழந்து அவளையும் அருந்துயர்க் கடலில் ஆழ்த்தினாய்; பின்னர், எம்பால் வந்திங்கு எற்றுக்கு அழுகின்றனையோ" என்று அவை இடித்தேனும் உரைக்கவேண்டு மென்பதோ இவ்விராமன்தான் விரும்புமொருமாற்றம்! சீதையின் இணைமுலைக்கும் மென்னடைக்கும்தோற்றுமுன்ஒதுங்கிய சக்கரவாளமும் அன்னமும், அத்தோல்வியால் விளைந்த வொரு செற்றத்தைத் தனியேயிருக்குந் தன்பால்இப்பொழுதுசெலுத்தநினைத்தல்எவ்வகையினுந் தகவன்று என்றிவன் கூறுவதன் குறிப்பை அறிந்து கொண்டால் அப்பறவைகள் இனி இராமன் இருந்த திசையையும் நாடாமல் ஓடிவிடும். அன்னவைபால் இவன் வேண்டுமவ் வொருமாற்றம்யாதென அவனே தெளிந்திரான். அதுவே அவனுடைய துயரத்தின் வன்மையைக் காட்டுகின்றது. சீதை சென்றாள விடத்தை இவைபால் வினவியறிய விழைந்தனன் என்னற்கில்லை. பனியிருளில் பாழ்மண்டபத்தேசோர் துயிலில் தன் காதலியை நினையாமல் நீத்தகன்ற நிடதர்கோன் நளன், கடற்கரை யடைந்து,

கொம்பரிளங் குருகே கூறா திருத்தியால்
அம்புயத்தின் போதை யறுகாலால்—தம்பி
திறக்கத்தே னூறுந் திருநாடன் பொன்னை
உறக்கத்தே நீத்தேனுக் கொன்று

எனக்குறையிரந்தநாள், தமயந்தி சென்றநெறி வினவினானல்லன் என்பது நிச்சயம். மதியிழந்து ஓர் பொய்ச்சூது ஆடினானேனும், தானே விட்டுப்பிரிந்த ஒருத்தி இருக்குமிடங்கேட்குமளவு இன்னும் அந்நளனுக்குப் பித்தேறவில்லை. ஆதலின், காதலர்ப் பிரிந்தவர் கருத்தின்றி இங்ஙனம், யாரையேனுங் கண்டு எதையேனும் சொல்லும்படி கேட்பார் போலும். மற்று, அன்னமும் வாளமும் என்ன வுரைப்பதென்று அறியமாட்டாமல், (இலக்கணக்கேள்வி கேட்கப்பெற்றத் தமிழ்வகுப்பு மாணவன்போல்) விழித்துநிற்க, இராமன் அவ்வயின் ஆடிய வோர் மயிலைநோக்கி,

ஓடா நின்ற களிமயிலே
    சாயற் கொதுங்கி யுள்ளழிந்து
கூடா தாரிற் றிரிகின்ற
    நீயு மாகங் குளிர்ந்தாயோ
தேடா நின்ற வென்னுயிரைத்
    தெரியக் கண்டாய் சிந்தையுவந்
தாடா நின்றா யாயிரங்க
    ணுடையாய்க் கொளிக்கு மாறுண்டோ.

[ஓடி விளையாடுகின்ற களிப்புடைய மயிலே, சீதையின் சாயலைக்கண்டு நாணி மனமழிந்து பகைவர்போல் திரிகின்ற நீயும் இப்பொழுது அவள் இல்லாமை கண்டு மனங்குளிர்ந்தாயோ. அவளைத் தேடுகின்ற என் உயிரின் நிலைமையைத் தெரியக்கண்டாய், அதனால் மனமுவந்து கலாபம் விரித்து ஆடுகின்றாய். அவளைவிட்டுப் பிரிந்த என் பரிபவநிலையை, ஆயிரம் கண்களுடைய நீ காணுவகைமறைப்பதற்கு இயலுமோ]

என ஏங்கினான். கலாபம் விரித்தாடுங் களிமயிலிதன்பால் தான் ஒன்றும் எதிர்பார்ப்பதற்கில்லை என, காளிதாஸன் நாடகத்தில், உருப்பசியை அரிதிற்பிரிந்து பெருந்துயரழன்றபுரூரவமன்னன், மயிலினைநோக்கி,

பறவாய் பறவாய் வியன்பெரு வியவைப்
பறையா அழுதே கதழும் பறவாய்
பூமலி பொதும்பரில்
சாமளத் தரையினில்

அதடத் தருகினில்
உவதைக் கெதிரினில்
படிகத் தெளிசுனைக் கருணியின் பாங்கர்
குடிஞை குலவிய வறற்சிறை யாதல்
கேகயப் பறவாய்
ஏகிய துண்டேல்
கண்டாய் கொல்லோ யான்பரி யணங்கினைக்
கண்டனை யாயி னறிகுவை மற்றவள்
பகரச் சாயல் பயப்பய நடப்பாள்
மென்விழி மதர்க்கண் ணைத்தனு
மறிகுவை யவளெனப் பறவாய்
உரையாய் பறவா யொருசொல் லெனக்கே

எனப் பரிவுடன் வேண்டியும் அம்மயில்தான் தனது உவகையே கைமிகுந்து ஆடியிருந்த நிலைகண்டு,—"பதிலொன்றும் பகரவில்லையே......ஏன் ஐய...நின்னோடுரையாடற் கேற்றவ னல்லனோ நான்...சதிமிதிக்கின்றாய்.....என்னிலைகண்டும் நிர்த்தனம் செய்ய நினைத்தனையே! இந்நாள் நின் ஒகைக்கு உற்றகாரணம் யாவதாங்கொலோ!......அறிந்தெனென்...நின் னுமையாளை இகல்வென்ற சுருளளக ஊர்வசியும் இம்பர்விட்டு அகன்றன ளென்றவோர் எக்களிப்போ...மதியிலா மயூரமே......நன்னீல மின்னொடு முன் கழுத்து ளென்பாலோ ரீரமில்லையே. ஈண்டினிப் பயனில்லை.பிறர்படுதுயர் நோக்கிப் பரியாரைச் சிறிதேனும் நினையாமல் நீத்தகல்வேன்......" என அகன்றவாறே இராமனும்,மயிலை வினவுவதுவிட்டு அங்கோர் மடவன்னத்தின் பெடையைப் பார்த்து,

அடையீ ரெனினு மொருமாற்ற
மறிந்த துரையீ ரன்னத்தின்
பெடையீ ரொன்றும் பேசிரோ
பிழையா தார்க்குப் பிழைத்திரோ
நடைநீ ரழியச் செய்தாரே
நடுவி லாதார் நனியவரோ
டுடையீர் பகைதா னுமைநோக்கி
யுவக்கின் றேனை முனிவீரோ

[அன்னப் பெடையே, என்னருகு நீ வரவில்லையாயினும், உனக்குத் தெரிந்தவரையில் ஏதேனும் பேசமாட்டாயோ. உன் விஷயத்தில் ஒன்றும் பிழை செய்யாத எனக்குநீ பிழைசெய்யலாமா! இடைப்பு இல்லாத சீதையேதான் நீ நடையில் தோற்று அழியும்படி செய்தாள். அவளுடன்தான் நீ மிக்க பகை பாராட்டினால் பாராட்ட வேண்டும். நானோ உன்னைப் பார்த்து உவக்கின்றேன் ; என்னையும் வெறுப்பாயோ]

என வேண்டியும் எதிர்மொழி பெறுமையால், பொய்கையின்கண் உள்ள பதுமமலரை நோக்கி,

பொன்பால் பொருவும் விரையல்லி
புல்லிப் பொலிந்த பொலந்தாது
தன்பாற் றழுவுங் குழல்வண்டு
தமிழ்ப்பாட் டிசைக்குந் தாமரையே
என்பா லில்லை யப்பாலோ
விருப்பா ரல்லர் விருப்புடைய
உன்பா லில்லை யென்றக்கா
லொளிப்பா ரோடு முறவுண்டோ

[பொன்னைப்போன்றதும்வாசனையுடையதுமாகிய அகவிதழ்களை அடைந்து, அவற்றில் விளங்குகின்ற பொன்போன்றமகரந்தப் பொடியினிடத்தில் தன் பெடையைத் தழுவிக்கொண்டு, குழலைப்போலப் பாடுகின்ற வண்டுகள் தமிழ்ப்பாட்டைப்பாடுவதற்குஇடமாயிருக்கின்ற தாமரையே, சீதை என்னிடத்தில் இல்லை, அயலெங்கும் அவளோ இருக்கமாட்டாள். அவளால் விரும்பப்படுகின்ற உன்னிடத்திலும் இல்லையென்று நீயுஞ்சொல்லிவிட்டால்,இனி, வைத்துக்கொண்டு இல்லை என்று மறுப்பவருடன் நான் உறவு பாராட்டுவேனோ]

என மனமுளைந்து கூறினன். குழல்வண்டு தமிழ்ப் பாட்டிசைக்குந் தாமரை, இயல்வது கரக்குமென்று இராமன் முறையின்றி எண்ணியதும், அவன் துன்பத்திற்கோர் முடிவில்லை என்பதையே காட்டும். தமிழ் என்னும் இச்சொல் இனிமைப் பொருளது. அன்றி, அக்காலத்தில் பம்பைக்கரையிலும் தமிழ்மொழியே பயின்றிருந்ததென்னும் ஆராய்ச்சிக்கு இச்செய்யுளை அடைக்கலமாக்கினும் அதிசயமில்லை. வண்டே தமிழ்ப்பாட் டிசைக்குமெனின் மக்கள்பேசிய மொழி எதுவெனப் பின்னர் அயிர்ப்பதெல்லாம் அயிர்ப்பார் பிழையே யன்றி வேறன்று. வண்டு தமிழ்பாடினும் தாமரையோ அமிழ்தின்வந்த தேவியைக் காட்டித் தரவில்லையாதலின், இராமன் அதனை விட்டு,

ஒருவா சகத்தை வாய்திறந்திட்
டுதவாய் பொய்கை யுள்ளொடுங்குஞ்
திருவா யனைய சேதாம்பற்
கயலே கிடந்த செங்கிடையே
வெருவா வெதிர்நின் றமுதுயிர்க்கும்
வீழிச் செவ்விக் கொழுங்கனிவாய்
தருவா யவ்வா யின்னமிழ்துந்
தண்ணென் மொழியுந் தாராயோ

[இப்பொய்கையில் குவிந்திருக்கின்ற, சீதையின் அழகிய வாயைப்போன்ற சிவந்த ஆம்பல் மலருக்குப் பக்கத்திலே இருக்கின்ற சிவந்த சடையே, அஞ்சாமல் நீ என் எதிரே இருந்து அமிர்தம்போன்ற மொழிகளைப் பேசுகின்ற அழகுடைய செழிப்பான வீழிப்பழம் போன்ற சீதை தன் வாயின் வண்ணத்தைக் காட்டுவாய். ஆயினும் அவள் வாயிலுள்ள இனிய அமிர்தத்தையும் குளிர்ந்த மொழிகளையும் எனக்குக்கொடுக்கமாட்டாயோ! வாய்திறந்துஒரு வார்த்தை உதவாமல் இருக்கின்றாயே]

என்றும், பின்னர்க் குவளைமலரை நோக்கி,

பஞ்சுபூத்தவிரற்பதுமம்பவளம்பூத்தவடியாளென்
நெஞ்சுபூத்ததாமரையினிலயம்பூத்தாணிறம்பூத்த [வளாய்
மஞ்சுபூத்தமலர்பூத்தகுழலாள்கண்போல்மணிக்கு
நஞ்சுபூத்ததாலென்னநகுவாயென்னைநலிவாயோ

[செம்பஞ்சுக் குழம்பு ஊட்டிய விரல்களோடு, செந்தாமரை மலரில் பவளம் பதித்ததுபோன்ற பாதங்களையுடையவளும், என் இதயம் என்னும் தாமரையில் நிலைத்திருப்பவளும்,கருநிறங்கொண்ட மேகத்தைப்போன்று இருப்பதும் மலர்களைச்சூடியதுமான கூந்தலையுடையவளும்ஆகிய சீதையின் கண்களை ஒத்திருக்கின்ற அழகிய நீலோற்பலமே, நீ விஷம் படர்ந்ததுபோல் மலர்ந்து நகைத்து என்னை வருத்துவாயோ.]

என்றும் பலபடி பன்னிப் பன்னி இரங்குவா னாயினன் இராமன்.

சக்ரவாளம் அன்னம் பதுமம் செங்கிடை மயில் முதலியவைகளை இவ்வண்ணம் தனித்தனி வேண்டி வாயிழந்த இராகவன் பின்னர்ப் பம்பைப் பொய்கையையே நோக்கி,

வண்ண நறுந்தா மரைமலரும்
வாசக் குவளை நாண்மலரும்
புண்ணி னெரியு மொருநெஞ்சம்
பொதியு மருந்திற் றரும்பொய்காய்

கண்ணு முகமுங் காட்டுவாய்
வடிவு மொருகாற் காட்டாயோ

[அழகிய வாசனையுடைய தாமரை மலர்களையும், வாசனையுடைய அன்று மலர்ந்த குவளை மலர்களையும், புண்போல எரிகின்ற என் நெஞ்சிற்குத் தடவுகின்ற மருந்துபோலக் கொடுக்கின்ற தடாகமே, சீதையின் கண்களையும் முகத்தையுங் காட்டுகின்ற நீ அவளுடைய வடிவம் முழுவதையும் எனக்குக் காட்டமாட்டாயோ. தம்மால் செய்யக்கூடுமாகுல்அவ்வுதவியைச்செய்யாமல் உலோபஞ் செய்தவர்கள் உயர்ந்தவர்க ளாவாரோ]

என்ன, உயர்ந்தோர் இயற்கையை அப்பொய்கைக்கு எடுத்துக்கூறினன். சீதையின் வடிவம் முழுவதும் அத்தடாகத்தில் என்னவா றிவன் காண எண்ணினனென்பது தெரிந்ததில்லை. துயரமடைந்தவர் காரணமின்றியேயும் யாவரையுங் குறைகூறுகின்ற இவ்வுலகத்து இயற்கையை இராமனும் மேற்கொண்டு நடித்தனன் என்பதல்லால் வேறு இதனை உணருமாறில்லை. இராமன்தன் மனநிலை மிகவுங் கலங்கியிருந்த தென்னக் காட்டுமொருதிறத்தினை அடுத்தசெய்யுளிற் காணலாம்—

விரிந்த குவளை சேதாம்பல்
விரைமென் கமலங் கொடிவள்ளை
தரங்கங் கெண்டை வராலாமை
யென்றித் தகைய தமைநோக்கி
மருந்தி னனையா ளவயவங்க
ளவைநிற் கண்டேன் வல்லரக்கன்
அருந்தி யகல்வான் சிந்தினவோ
வாவி யுரைத்தி யாமென்றே

[மலர்ந்த குவளை மலர்களும் சிவந்த ஆம்பல் மலர்களும், வள்ளைக்கொடியின் இலைகளும், அலைகளும், கெண்டை மீன்களும், வரால் மீன்களும், ஆமைகளும், என்று இத்தகைய பொருள்களை நோக்கி, "ஏ, பொய்கையே, அமிர்தம் அனைய சீதையின் அவயவங்களை உன்னிடத்தில் பார்க்கின்றேன். அவ்வவயவங்கள் வலிய அரக்கனாகிய இராவணன், அகன்ற வானத்தில் கொண்டு செல்கையில் சீதையைத் தின்னும்போது கீழேசிந்தியவைகளோ சொல்வாயாக", என்று கூறினன்.]

"ஆயின் தின்னத்தான் சீதையைக் கொண்டுசென்றான் அவ்வரக்கன் என்பது உன் எண்ணமோ?" என வாவியும், வாயிருக்குமானல், இராமனை எதிர் வினவியிருக்கும். சீதையினது உறுப்பு ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் உவமைப் பொருள் அவ்வாவியில் இருந்ததென்னக் காட்டல், கம்பர் கிடக்க, கவியென்ற பெயருடைய எவருக்கும் அருமையன்று. அவைகளைக்கண்டு, இராவணன் தின்றுசிந்திய சீதையின் அவயவங்கள் எனப் பேசுதல் இராமனுக்கும் பெருமையன்று. ஆயினும்,

"நான் இல்லாத சமயத்தில் வந்து பிசிதவூணர்களாகிய அரக்கர்கள் அவளுடைய அவயவங்களைக் கிழித்து அவளைப் புசித்துவிட்டார்கள் என்பது நிச்சயம். அழகிய பற்களும் அழகிய மூக்கும் உடையதாய் வெள்ளைக் குண்டலங்கள் அணிந்து விளங்கும் பூரண சந்திரன் போன்ற அவள் முகம் அரக்கர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டபோது ஒளி குன்றி வெளுத்துப்போயிருக்கும். அவள்கழுத்துச் சம்பகப்பூவின் நிறமுடையதாய் மாலை யணிந்துஇருந்தது. அதனை அவள் கதறக்கதற அரக்கர் புசித்திருப்பார். தளிர்போன்ற பலவகை வளைகளணிந்த அழகிய கைகளை அவள் பயத்தால் உதற உதற அரக்கர்கள்புசித்திருப்பார்கள்.ஐயோ, அரக்கர்கள் புசிப்பதற்காகவா நானவளை அங்குத் தனியாக விட்டுப் போனேன்! அநேக பந்துமித்திரர்கள் இருந்தும் அநாதைபோல் அவள் அரக்கர்களால் புசிக்கப்பட்டாளே!

என்று முன்னர் வான்மீகத்தில், இலக்குவன்பால் இயம்பி இயம்பிப் பஞ்சவடியில் ஏங்கிய மொழிகளை இக் கம்பர் நூலில் சொல்ல மறந்த குறையினைத் தீர்க்கப் புகுந்தவன்போல இப்பம்பைக் கருகில் வழங்கலாயினன்போலும். அரக்கர் தின்னும் இரையாகச் சீதையை நினைத்த இது இவன் துன்பத்தின் கொடுமையைக் காட்டுகின்றது. மற்று, வான்மீகத்தினின்று இடம் பிறழ்ந்து வருதலால் பிழையும் படுகின்றது. தான் விட்டுச்சென்றவிடத்தில் சீதை தென்படாதது தெரிந்தவுடன் கோதாவிரிக் கரையில் உரைத்தவை அவை. அரக்கர் சிலர் புகுந்து சீதையைப் புசித்திருக்கலாம் எனப் பொதுவுறப் பேசுதல்,கேட்போர் மயிர் பொடிக்கும்படி மிகைபடு நாடக மாகின்றதெனினும் ஒருவாறு பொருந்தும். மற்று, சீதையைத் தூக்கிச் சென்றவன் இராவணனே என்னுமச் செய்தியைச் சடாயுவினுல் அறிந்தபின்னும்,அவ்விராவணன், ஒரு பெண்ணைத் தின்னுவதற்கே இத்தனை தூரம் தேடி வந்து இத்துணை முயன்றானென்னல், மறைதந்த நாவுடைய ஒருவனும், துயரின் கொடுமையால் வாய் தந்தன புலம்பவும் இயலும் என்பதை எடுத்துக் காட்டவோ, யாதோ!

இன்னவாறெலாம் நெடியவன் நெஞ்சுடைந்து வருந்து மெல்லையில் அந்திகழிந்து இருளும் சூழ்ந்தது.

மண்டுயின் றனநிலைய மலைதுயின் றனமறுவில்
பண்டுயின் றனவிரவு பணிதுயின் றனபகரும்
விண்டுயின் றனகழுதும் விழிதுயின் றனபழுதில்
கண்டுயின் றிலநெடிய கடறுயின் றனகளிறு

பூமியிலுள்ளவை துயின்றன, நிலையுள்ள மலைகள் துயின்றன. மாசற்ற பண்கள் துயின்றன. நாகலோகத்திலுள்ள பாம்புகள் துயின்றன. சொல்லப்படும் ஆகாயத்தில் உள்ளவை துயின்றன. பேய்களும் கண் துயின்றன. ஆயினும், பெரிய பாற்கடலில் பள்ளிகொண்டிருந்த யானைகளாகிய இராம லக்ஷ்மணர்கள் மாத்திரம் கண் துயிலவில்லை.]

கண் துயிலாது கிடந்த இவர் கதிரோன் உதித்ததும், சீதையைத் தேடுவான் புறப்பட் டேகினர்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலகிஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலக.தைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்தது) I.D.L. டெ.மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ம.ட.ச்யாவனப்ராச- சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்தசிற்றமணக்கு எண்ணை காஸ்ட்ராலக்ஸ்
ஜ்வரேக் ஜ்வரங்களுக்கும்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

# வர்த்தமானம்

செட்டிநாட்டுக்

## கலா நிலயக் கல்விக் கழகம்.

இக் கழகத்தின் அடுத்த வகுப்பு, கானாடு காத்தானில் ஏப்ரல் மாதம் 28, 29-ம் தேதிகளிற் கூடும். (சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை.)

அவ்விரு தினங்களிலும் மாலை 6 மணிக்குக் காரைக்குடியில், S. M. S. ஹைஸ்கூல் கட்டிடத்தில் ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர், B.A., B.L., கம்பராமாயணக் கட்டுரைகள் நிகழ்த்துவார்.

---

காஞ்சீபுரக்

## கலா நிலயக் கல்விக் கழகம்.

இப்பொழுது காஞ்சீபுரத்தில் கீழ்க்கண்ட இடங்களில் தமிழ் வகுப்புக்கள் மூன்று நடந்து வருகின்றன:—

(1) பெரிய காஞ்சீபுரம் தாலுக்கா ஆபீஸிற்கு எதிரிலிருக்கும் வாசக சாலையில் (Reading Room) திங்கள் வியாழன் கிழமைகளில், மாலை 6-45 முதல் 7-30-வரையில்.

(2) ஆடிஸன்பேட்டை, ஜவுளிக்கடை சத்திரத்தின் மேல்வீட்டில், டாக்டர் ஸ்ரீநிவாச ஐயர் வைத்திய சாலையில், புதன் சனிக் கிழமைகளில், 6-45 முதல், 7-30 வரையில்.

(3) சின்ன காஞ்சீபுரம் திருக்கச்சி நம்பித் தெருவில் இருக்கும் அர்பன் பாங்க் கட்டிடத்தில் செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில், மாலை 6-45 முதல், 7-30 வரையில்.

பெரிய காஞ்சீபுரத்திலும் சின்ன காஞ்சீபுரத்திலும், நளவெண்பாவும் வில்லிபாரதமும் அஷ்டபிரபந்தமும் முடிந்து இப்பொழுது நைடதம் நடக்கின்றது. ஆடிஸன் பேட்டை வகுப்பில், நளவெண்பா முடிந்து வில்லிபாரதம் நடக்கின்றது.

மாலைக் காலங்களில் இவ்வகுப்புக்களுக்கு வர இயலாதபடி வேலையிருப்பவர்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு வேறோர் புதிய வகுப்பு—

ஏப்ரல் மாதம் 25௨ புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு

ஆடிஸன் பேட்டை ஜவுளிக்கடை சத்திரத்தில் உள்ள டாக்டர் ஸ்ரீநிவாச ஐயர் வைத்திய சாலையில் ஆரம்பமாகிஇருக்கின்றது. மற்ற வகுப்புக்களில் சேர்ந்து படிக்க இயலாதிருந்தவர் இவ்வகுப்பிற்கு வந்து சேரும்படி வேண்டப்படுகின்றனர்.

---

52 முறை:—கல்கத்தாவில் ஷேக் இஸ்மால் என்பவன் இதுவரை ஐம்பத்தோரு முறை சிறை சென்றவன். அகாரணமாக வீதியில் திரிந்துகொண்டிருந்தானென்ற குற்றத்திற்காகத் திரும்பவும் இப்பொழுது மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை அடைந்திருக்கிறான். தற்காலச் சிறைவாசமுறை மக்களைத் திருத்துவதில்லை யென்பதற்கு ஷேக் இஸ்மாலே சிறந்த உதாரணமாவான்.

* * *

துருக்கி ராஜ குடும்பத்தின் கதி:—துருக்கி மாஜி சுல்தானின் குடும்பத்தார் மிகவும் கஷ்டப்படுவதாக அவருடைய பேரன் ப்ரின்ஸ் ஜமாலுதீன் எபண்டி மூலமாகத் தெரியவருகிறது. ஆப்கன் சைன்யத்தில் ஏதாவது வேலை கிடைக்காதா என்று ப்ரின்ஸ் ஜமாலுதீன் இப்போது காபூலுக்குப் போய்க்கொண் டிருக்கிறார். இதே இளவரசர் ஜமாலுதீன் முன்பு துருக்கிய சைன்யத்தின்பாதிக்குச் சேனாதிபதியாக இருந்தார். காலஞ்சென்ற அப்துல் ஹமீத்தின் மனைவியான சுல்தானா சன்யாவும் இவருடன் கூட வந்திருக்கிறார். துருக்கி ராஜ குடும்பத்தார் துருக்கியிலிருந்து வெருட்டப்பட்ட பிறகு பல கோஷ்டிகளாகப் பிரிந்துபோனதாகவும் ஒரு கோஷ்டி நைஸ் என்ற இடத்திலும் மற்றொன்று சிரியாவிலும் தாமதித்ததாகவும் அவர்களில் பெரும்பாலார் மகத்தான கஷ்டத்திற்குள்ளாகி ஒருவர் பசியாலும் பட்டினியாலும் பாரிஸ் நகரில் உயிர் துறந்ததாகவும் தெரிகிறது.

---

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—
T. ANANTACHARI,
Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.
OR
R. G. DAS & Co.,
*Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—
T. ANANTACHARI,
Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.
OR
R. G. DAS & Co.,
*Managers.*

கோடையின் கொடுமை
நீங்கள் ஆயுர்வேத முறைப்படி செய்யப்பட்ட
எங்களுடைய
மணி தைலத்தை
உபயோகித்தீர்களா ?
மூளையைக் குளிரச்செய்து கை கால் கண்களின் எரிச்சலைச் சமனஞ்செய்து தலை மயிரை நீண்டு வளரும்படி செய்யும். உடனே வாங்கி உபயோகியுங்கள்.
5 தலம் தைலங் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1.
இனும் ! கேட்லாக். இனும் !!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)